பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 13 புதன்கிழமை 29.11.2023 கதிர் 383

# பழைய தேர்தல் முறைக்கு எதிர்க்கட்சிகள் இணங்கினால் மாகாண சபைத் தேர்தல்

## பிரதமர் நேற்று நாடாளுமன்றில் அறிவிப்பு

மாகாண சபைத் தேர்தலைப் பழைய தேர்தல் முறையில் நடத்துவதற்கு எதிர்க் கட்சிகள் இணங்கினால் அதனை நடத்த முடியும் என்று பிரதமர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார்.

வரவுசெலவுத்திட்டவிவாதத்தில் நேற்றுக் கலந்துகொண்டு பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் முறைமை தொடர்பில் எதிர்க்கட்சிநாடாளுமன்றஉறுப்பினர்கள் வித்தியாசமான யோசனைகளை முன்வைக்கின் ☞ 2

## இனி அது ரகசியம் அல்ல!

அரகலய போராட்டத்தின்போது நாடுஒருகுழப்பகரமானசூழலுக்குள் சிக்கிக்கொண்டிருந்தபோது அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்துப் பேசுவதற்காகஅனைத்துக்கட்சிகளின் தலைவர்களையும் ஒருங்கிணைத்துக் கலந்துரையாடல்கள் நடத்தும் முயற்சியை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் மேற்கொண்டிருந்தார்.

அந்தக்கூட்டங்களில்எதிர்க்கட்சிகள் இடையே பல இணக்கப்பாடுகள் எட்டப்பட்டன.அரகலயபோராட்டத்தால் ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவி விலகும் நிலை ஏற்பட்டால் அதற்கு அடுத்து எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து இந்தக் கூட்டத்தில் மிக முக்கியமான இணக்கப்பாடுகள் கூட ☞ 2

## சபாநாயகருடன் இந்தியத் தூதர் நேற்றுச் சந்திப்பு

இலங்கையில் சேவைக் காலத்தை நிறைவு செய்துகொண்டு வெளியேறவுள்ள இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவை நேற்று நாடாளுமன்றத்தில்சந்தித்துப்பேசினார்.

அப்போது இந்தியா இலங்கைக்கு வழங்கிய அனைத்து ஒத்துழைப்புக்களுக்கும் சபாநாயகர் நன்றி தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடியின் போது இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்க இந்தியாவே முதலாவதாக ☞ 2

## இராணுவ முகாம்கள் அமைந்துள்ள துயிலுமில்லங்களை விடுவியுங்கள்

### கஜேந்திரகுமார் எம்.பி. நாடாளுமன்றில் கோரிக்கை

நினைவேந்தல்கள் மூலம் மக்கள் தமது மரியாதைகளை செலுத்துவதற்குரிய வகையில் இராணுவமுகாம்கள் அமைக்கப்பட்டுள்ள துயிலுமில்ல காணிகள் அனைத்தும் விடுவிக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமானகஜேந்திரகுமார்பொன்னம்பலம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுஇடம்பெற்ற2024 வரவுசெலவுத்திட்டத்தின் பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும்உள்ளூராட்சிமன்றங்கள் இடம்பெற்ற அமைச்சுக்கானசெலவுத்தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவரது உரையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

அம்பாறைமாவட்டம் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் 1989 ஆண்டு புதிய உப பிரதேசசெயலர் பிரிவாக அங்கீகரிக்கப்பட்டது. 1993இல்அமைச்சரவைப் பத்திரத்தினூடாக தனி பிரதேச செயலாளர் பிரிவாக இயங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்டு அது உத்தியோகபூர்வமாக இயங்கி வந்தது. காலப்போக்கில், முழுமையாக பிரதேச செயலாளர் பிரிவாக இயங்குவதற்குரிய கணக்காளர் போன்ற முக்கியமான நியமனங்களை அதற்கென வழங்காமல், அரசியல் காரணங்களுக்காக கல்முனை முஸ்லிம்பிரதேசசெயலர் பிரிவுக்கு நியமனம் செய்துகல்முனைவடக்கு பிரதேச செயலம் உப பிரிவாகவே செயற்பட்டு வருகின்றது.

இதனால்மக்களுக்கு தேவையான நிர்வாகத்தை நடத்த முடியாமல் உள்ளது. அரசியல்காரணங்களால் பழிவாங்கல்களும் நடைபெற்று வருகின்ற நிலையில், கடுமையான பாதிப்புக்களை தமிழ் மக்கள் சந்திக்கிறார்கள். இதன் காரணமாக, ஏற்கனவே வர்த்தமானி மூலம் ☞ 2

## காலநிலை குறித்த துபாய் மாநாட்டில் ஜனாதிபதி ரணில் பங்கேற்கவுள்ளார்

இதுவரை நடைபெற்றஐக்கியநாடுகளின் காலநிலை தொடர்பான மாநாட்டில் எட்டப்பட்ட இணக்கப்பாடுகள்மற்றும் உடன்படிக்கைகளை விரைவாகநடைமுறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டத்தை தயாரிக்கும் பிரதான நோக்கத்துடன் இந்த வருடம் துபாயில் நடைபெறும் மாநாட்டில்ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் இலங்கைப் பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளதாக சுற்றாடல் அமைச்சர் கெஹலியரம்புக்வெல்ல தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் ☞ 9

## அரச கொள்கைக்கு இணங்காதோர் வெளியேறிச் செல்லவேண்டியதுதான்

### ரொஷானின் நீக்கம் பற்றி பிரதமர் பேச்சு

அரசின் கொள்கையுடன் இணங்கிப்போக முடியாதவர்கள் ஆட்சியிலிருந்து வெளியேறிச் செல்லலாம்என்றுபிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்ட ரொஷான் ரணசிங்வகின் விசேட கூற்றை அடுத்து உரையாற்றும் போதே அவர் ☞ 2

## ரூபவாஹினி, ஒலிபரப்பு கூட்டுத்தாபனங்கள் பொது நிறுவனங்களாக மாற்றப்படவுள்ளன

### அமைச்சர் பந்துல குணவர்த்தன அறிவிப்பு

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் ஆகியவை பொது நிறுவனங்களாக மாற்றப்படும் என வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர்அங்கு மேலும்தெரிவித்ததாவது:

இலங்கை ரூபவாஹினிகூட்டுத்தாபனமும் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனமும் தொடர்ந்தும் நட்டத்தை ஈட்டும்நிறுவனங்களாகக் காணப்படுவதாக வெகுசன ஊடகத்துறை அமைச்சு சார் ஆலோசனைக் குழுவில் தெரியவந்துள்ளது.

2015 ஆம் ஆண்டு முதலான புள்ளி விவரங்களை முன்வைத்து, இந்த அலைவரிசைகள் எவ்வாறு நட்டம் அடைந்துள்ளன என்பதை குழுவின் தலைவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

இதற்கமைய, ☞ 9

## வவுனியா மாவட்டக் குடிப்பரம்பலை மாற்ற அரசு நீண்ட காலமாக முயற்சி

### நாடாளுமன்றத்தில் சித்தார்த்தன் எம்.பி. குற்றச்சாட்டு

வவுனியா மாவட்டத்தில் குடிப்பரம்பலை மாற்றுவதற்கு அரசு நீண்ட காலமாகத் தொடர்ந்துமுயற்சிசெய்து வருகின்றதுஎன்றுயாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தின் பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும்உள்ளூராட்சிமன்றங்கள் இடம்பெற்ற அமைச்சுக்கானசெலவுத்தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரதமருடைய பேச்சிலே தேர்தல் ☞ 2

## தரமற்ற மருந்து இறக்குமதி: விசாரிக்க 3 சிஐடி குழுக்கள்

தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஆராய்வதற்காக 3 குற்றப்புலனாய்வுப்பிரிவு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வுதிணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த விசாரணைகளின்போதுஅமைச்சின் முன்னாள் செயலாளர் உள்ளிட்ட சுமார் 30 அதிகாரிகளின் வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளதாகவும் அத்திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மருந்துகளை இறக்குமதி செய்வதற்கான விலைமனுகோரல், மதிப்பீட்டு செயன்முறை நீண்ட காலமாக ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

இரண்டாம்கட்டமாக முன்னாள் ☞ 8

## நாட்டின் பாதுபாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை

### அமைச்சர் பந்துல அறிவிப்பு

தேசிய பாதுகாப்பு குறித்து அச்சப்படத் தேவையில்லை என்று வெகுஜன ஊடக, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள்அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமானகலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், விடுதலைப் புலிகளின் முன்னாள் தலைவர் பிரபாகரனின் மகள் என கூறப்படும் பெண் ஒருவர் ஆற்றிய உரை மற்றும் நாட்டின் பாதுகாப்பு குறித்து ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்அவர் ☞ 2

## வருடம் ஒன்றுக்கு 5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளே இலக்கு

### ஜனாதிபதி அறிவிப்பு

இலங்கையின் அந்நியச் செலாவணிக் கையிருப்பைவலுப்படுத்தும் வகையில் இலங்கைக்கு 5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை வரவழைக்கும்இலக்கை அடைய வேண்டும் எனவும், பாரம்பரிய முறைகளிலிருந்துவிலகிப் புதிய சிந்தனையுடன் சுற்றுலாத்துறை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு ஷங்ரிலா ஹோட்டலில் நேற்று நடைபெற்ற இலங்கை ஹோட்டல்சங்கத்தின்58 ஆவது வருடாந்த ☞ 8

## கொன்ஸ்டபிள் மீது தன்மன்விலவில் சூடு

தப்பிச்செல்ல முயன்றசந்தேகநபரைத் துரத்திச்சென்றபொலிஸ் கொன்ஸ்டபிள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. படுகாயமடைந்த அவர் வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார்.

பொலிஸ் சுற்றிவளைப்பில் இருந்து தப்பிச் செல்ல முயன்ற நபரைத் துரத்திச் சென்றபோதே இந்தச் சம்பவம் ☞ 2

## பரீட்சைப் பெறுபேற்று திகதிகள் இனிமேல் கட்டாயமாக்கப்படும்

### அமைச்சர் பந்துல அறிவிப்பு

பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்படும் திகதிகள் கட்டாயமாக்கப்படவுள்ளன எனறு அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

புதிய கல்விக் கொள்கையில்பரீட்சைதிகதிகள் மற்றும் பெறுபேறுகள் வெளியிடப்படும் திகதிகள் கட்டாயமாக உட்படுத்தப்படவுள்ளன என்றும், கல்வி தொடர்பான அனைத்து விடயங்களுக்கும் தேவையான தீர்வுகளும் உள்ளடக்கப்பட் டுள்ளதாகவும் அமைச்சரவைப் பேச்சாளர், வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

எட்டப்பட்டன. ஆனால், கடைசியில் அந்த இணக்கப்பாடுகளை மீறி ரணில் விக்கிரமசிங்க தந்திரமாக நடந்துகொண்டு பதவியைக் கைப்பற்றிக்கொண்டார்.

இருந்தாலும் அந்த முயற்சியை சுமந்திரன் எம்.பி. தொடர்ந்தும் முன்னெடுத்துவருகின்றார். இந்தக் கலந்துரையாடல் தொடரில் மற்றொரு கலந்துரையாடல் நவம்பர் 22 கொழும்பில் நடந்துள்ளது. இந்தக் கூட்டத்தில் முக்கிய எதிர்க் கட்சிகளின் பிரமுகர்கள் கலந்துகொண்டிருந்தனர். அந்தக் கூட்டத்தில் பொருளாதார மீட்சிக்கான சிறந்த ஆட்சியை நோக்கிய கண்காணிப்புக்காக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளையும் கொண்ட ஒரு குழுவை நியமிப்பது என்று இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

ஆளும் தரப்பின் வருமான வரி சேகரிப்புத்தொடர்பில் கண்காணித்து அதுபற்றி நாடாளுமன்றத்துக்கு அறிக்கையிடுவது, உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பின் பேரில் ஆட்சியாளர்களால் கைவைக்கப்பட்டுள்ள ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகிய தொடர்பாகக் கணிகாணித்து உண்மைத் தகவல்களைத் தருவது உள்ளிட்ட 5 அம்சங்களில் கண்காணிப்பை இந்த அனைத்துக் கட்சிக் குழு மூலம் மேற்கொள்வது என்று அந்தக் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

கூட்டத்தில் காணப்பட்ட இணக்கப்பாடுகள் தொடர்பில் விரைவில் ஊடகங்களுக்கு ஓர் விளக்கம் வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் விரைவில் மீண்டும் ஒரு கலந்துரையாடலை நடத்துவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பழைய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றனர். மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் முறைமைக்கு அவர்கள் இணக்கம் தெரிவித்தால் நாம் தேர்தலை நடத்த முடியும்.

மாகாண சபைத் தேர்தல்கள் பழைய முறையிலும் மற்றவை புதிய முறையிலும் நடத்தப்பட வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் கூறுகின்றனர். ஆனால், மாகாண சபைத் தேர்தல் தொடர்பான தெரிவுக்குழுவில் எந்தவொரு கட்சியும் இணக்கப்பாட்டுக்கு வரவில்லை.

மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு கோருபவர்களே, தேர்தலை நடத்துவதற்கு முட்டுக்கட்டை போடும் மாகாண சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் திருத்தத்தையும் அங்கீகரித்தவர்கள் என்றார்.

## கொன்ஸ்டபிள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றது என்று தன்மன்வில பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த கொன்ஸ்டபிள் தனமல்வில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அம்பாந்தோட்டை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இந்தச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தனமல்வில பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அரச கொள்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்டவாறு தெரிவித்தார். அலர் மேலும் தெரிவித்ததாவது:

அமைச்சரவை என்றால் கூட்டுப்பொறுப்பு இருக்கவேண்டும். ஆட்சியாளர்களின் கொள்கைக்கு ஏற்பச்செயற்படவேண்டும். அப்படிக் கொள்கையுடன் இணைந்து செல்ல முடியாது என்றால் சென்று விடலாம். இதற்கு முன்னரும் பல உறுப்பினர்கள் இராஜினாமாச் செய்துள்ளனர்.

ரணசிங்க பிரேமதாச அமைச்சரவையின் முக்கிய உறுப்பினர்களான காமினி திஸாநாயக்க மற்றும் லலித் அத்துலத் முதலி ஆகியோரை விலக்கினார். ஆகவே இதுவொரு புதிய விடயம் அல்ல - என்றார்.

## வவுனியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்துவதிலே இருக்கக்கூடிய பிரச்சினைகள் சம்பந்தமாக பேசப்படுகின்றது. எங்களுடைய உறுப்பினர் சுமந்திரன் ஏற்கனவே இதுதொடர்பில் தனிநபர் பிரேரணை ஒன்றை முன்வைத்திருந்தார். பழைய முறையிலே சென்று தேர்தலை நடத்த முடியும் என்ற அதில் யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆட்சியில் உள்ளதரப்புக்களுக்கு மாகாணசபைத் தேர்தல் என்பது ஒரு அதிகார போட்டிக்கான விஷயமாக இருக்கிறது. ஆனால் தமிழ் மக்களை பொறுத்த மட்டில் இது ஒரு முக்கியமான விடயமாகும். ஆகக் குறைந்தது சிறிதளவாவது நாங்கள் எங்களுடைய பகுதிகளில் இருக்கக்கூடிய விடயங்களை பார்ப்பதற்கான ஒரு சபையாக பார்க்கின்றோம்.

இந்த மாகாண சபை ஒரு முழுமையான தீர்வாக இருக்க முடியா விட்டாலும் நிச்சயமாக அதனை நாங்கள் கொண்டு வரவேண்டும் என்று நாங்கள் பல தடவைகள் கேட்டுக் கொண்டிருக்கின்றோம். ஆகவே இப்போது கௌரவ பிரதமரும் எதிர்க்கட்சியிலே இருக்கின்றவர்களும் மாகாணசபைத் தேர்தலை நடத்தத்தான் வேண்டும் என்று ஒப்புக்கொண்டிருக்கின்றனர். ஆகவே நாங்கள் மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டும் என்று வினயமாக கேட்கின்றோம்.

பிரதமர் நான்கு மிக முக்கிய அமைச்சுக்களுக்குப் பொறுப்பாக இருக்கின்றார். நாட்டின் முழுமையான நிர்வாகத்துக்கு அது பொறுப்பாக இருக்கின்றது. பிரதம நீண்ட காலமாக, நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக நாடாளுமன்ற அங்கத்தவராக இருந்திருக்கிறார். பல தடவைகள் அமைச்சராக இருந்திருக்கிறார். பல தடவைகள் அவர் அமைச்சராக இருந்த காலங்களில் எல்லாம் பல பிரச்சினைகளை கொண்டு செல்லுகின்ற போது அவர் அதனை கரிசனையாக கேட்டு முழுமையாக நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றார்.

தேர்தலை நடத்தப்பணமில்லை என்ற காரணம் கூறப்பட்டிருக்கின்றது. அது வேற விஷயம். ஆனால் அந்த உள்ளூராட்சி சபையிலே வேட்பு மனு தாக்கல் செய்த பலர் அரச உத்தியோகத்தர்களாக இருக்கின்றார்கள். அதிகமானோர் வேலைக்கு போய்விட்டார்கள். ஆனால் பலருக்கு இன்னும் அவர்களினுடைய படிகள் கொடுக்கப்படவில்லை. பலர் இருக்கின்றார்கள் நான் வேண்டுமென்றால் அவர்களினுடைய விபரங்களை தர முடியும். தேர்தலில் வேட்பு மனு தாக்கல் செய்த அனைவருக்கும் அவர்களினுடைய படிகள் கிடைப்பதற்கு உறுதி செய்ய வேண்டும் என்று கேட்கின்றேன். அதேபோல இத்தகைய நடக்காத ஒரு தேர்தலுக்கு நிர்வாக செலவாக 940 மில்லியன் ரூபா செலவு செய்ததாக கணக்கில் காட்டப்பட்டுள்ளது.

இது நான் பத்திரிகையில் பார்த்த விடயம். இவ்வளவு பொருளாதார நெருக்கடியில் வேட்பு மனுக்களை எடுப்பதற்காக 940 மில்லியன் ரூபாவை செலவு செய்வது என்பது ஒரு வீண் விரயமாக தான் நான் பார்க்கின்றேன். மிகப் பெரும் தொகையான பணம் விரையம் செய்யப்பட்டிருக்கிறது.

பல சந்தர்ப்பத்திலே அரசியல்வாதிகள் விரயம் செய்கிறார்கள். ஊழல் செய்கிறார்கள். என்ற குற்றச்சாட்டுக்கள் தொகையாக வந்து கொண்டிருக்கும். இதில் பல அதிகாரிகள் செய்யும் ஊழல் விடயங்களினை கவனிக்காமல் விட்டு விடுகிறார்கள். இவற்றையும் நிச்சயமாக பிரதமர் கவனிக்க வேண்டும்.

ஏனென்றால் அவர்களின் கீழேதான் முழுமையான அதிகார நிர்வாகம் இருக்கின்றபடியால் பிரதமர் அவர்கள் இந்த பொருளாதார மீட்சிக்கு செயல்பட்டுகொண்டிருக்கின்ற இந்த சந்தர்ப்பத்திலே பொருளாதார மீட்சி என்பது எல்லாருமே ஒத்துச் செய்ய வேண்டிய ஒரு விடயம்.

சிலர் செய்கின்ற பிழைகளால் பொருளாதாரம் வீழ்ச்சியிடைந்து கொண்டிருக்கிறது என்பது நிச்சயமான ஒரு விஷயம். மாகாண சபையைப் பற்றிச் சொல்லி இருக்கிறோம். அதை நடத்துவதற்கான கட்டாயமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

அடுத்ததாக இன்னொரு விடயம் அம்பாறை மாவட்டத்திலே கல்முனை தமிழ் பிரதேச செயலகம் 2015 ஆம் ஆண்டு இப்போது ஜனாதிபதியாக இருக்கின்ற அன்று பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க கணக்காளர்களை நியமிக்கப்போகிறோம் என்று தமிழ் கட்சிகளுக்கு உறுதியளித்தார். அப்போது வஜிர அபேவர்தன அவர்கள் அமைச்சராக இருந்தார். எத்தனை பேரை நியமிக்கப் போகிறர்கள் என்று. தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உறுதியளிக்கப்படும், பின்பு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சென்று நியமிக்க கூடாது என்று கூற அது நிறுத்தப்பட்டது.

மீண்டும் நாங்கள் செல்வோம். சென்று கதைக்கின்ற பொழுது நியமிக்கப்படும். பின் அதே முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர் நியமிக்க வேண்டாம் என்று சொல்லும்போது நிறுத்தப்படும். அந்தச் சபை ஒழுங்காக நடக்காமல் இருக்கின்றபோது பல உப சபைகள் இருக்கின்றன. அதற்கு கணக்காளர் போடப்பட்டிருக்கிறது. பிரதேச அலுவலகமாகத் தரமுயர்த்தப்படுகின்றது. மிக நீண்டகாலமாக தமிழர்கள் இந்த கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதை செய்ய முடியாத நிலையிலே இந்த அரசாங்கம் இருக்கின்றது. வெறும் வாக்குக்களுக்காக. யாருடைய வாக்கு தேவை என்று நினைக்கின்றார்களோ அந்த வாக்கின் பக்கத்திலே நிற்கின்ற நிலைமை இந்த நாட்டிலே இருக்கின்றது. இதையும் பிரதமர் அவர்கள் கவனத்தில் எடுக்க வேண்டும்.

மேலும், வவுனியா நெடுங்கேணி பிரதேசத்திலே வெடி வைத்த கல்லு அருகே- அனுராதபுர மாவட்டத்தை சேர்ந்த ஒரு பகுதியைக் கொண்டு வந்து அதிலே இருக்க கூடிய கிராம நிர்வாகிகள் உடன்சேர்ந்து அதிலே இருக்கக்கூடிய கிராம நிர்வாகத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது.

அந்த கிராமத்திலிருந்து நெடுங்கேணி பிரதேசசபைக்கு 30 கிலோமீற்றர் காட்டுப்பாதையால் வரவேண்டும். அந்த மக்களே எழுதிக்கொடுத்திருக்கிறார்கள் அந்த அனுராதபுர மக்களே எழுதி கொடுத்திருக்கின்றார்கள், தங்களைவிட்டுவிடுங்கள் மீண்டும் அனுராதபுரத்துக்கு போகவேண்டும் என்று. அதை செய்வதற்கு இந்த அரசு தயங்குகிறது. ஏனென்றால் அங்கே ஒரு திட்டம் இருக்கின்றது. நீண்டகாலமாக அந்தத் திட்டத்தை உருவாக்கப் பார்க்கிறார்கள்.

போகஸ்வேவ என்ற இடத்திலே ஏற்படுகின்ற குடியேற்றம். இந்த குடியேற்றத்தின் மூலம் பக்கத்துக்கு அனுராதாதபுரத்திற்குள்ள நிலங்களை சேர்ப்பது, அதிலிருக்கக்கூடிய மக்களை சேர்ப்பது வெளி மாவட்டத்திலிருந்து மக்களை குடியேற்றுவது, இதன் மூலம் வவுனியா மாவட்டத்துக்குரிய குடிப்பரம்பலை மாற்றுவதற்கான முயற்சிகளும் எடுக்கப்படுகின்றன. இந்த முயற்சிகள் எல்லாம் எடுத்துக்கொண்டு ஒரு பொருளாதார வளர்ச்சியை பற்றி பேசுவது நிச்சயமாக நடைமுறைக்கு சரிவராது.

ஏனென்றால் தமிழ் மக்களைப் பொறுத்த மட்டில் முழுமனதுடன் இந்த செயல்பாடுகளில் பங்கு பற்ற வேண்டும். அவர்கள் முழு மனதுடன் செயல்பாடுகளில் பங்குபற்றுவதாக இருந்தால் அவர்கள் சரியான முறையிலே நடாத்தப்பட வேண்டும். அவர்களின் அரசியல் அபிலாஷைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும். இதை நிச்சயமாக அரசு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன் என்றார்.

## நாட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மீண்டும் இந்த நாட்டில் பயங்கரவாதம் இடம்பெறுவதை இந்த நாட்டில் உள்ள எவரும் விரும்ப மாட்டார்கள் என தெரிவித்த அமைச்சர், நாட்டை கட்டியெழுப்புவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் சுட்டிக்காட்டினார்.

## சபாநாயகருடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்வந்தது என்பதையும் சபாநாயகர் அங்கு சுட்டிக்காட்டினார்.

இலங்கை தொடர்பில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி விசேட கவனம் செலுத்துகிறார் எனவும், இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இந்தியா சாதகமான நிலையில் உள்ளது எனவும் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே சபாநாயகரிடம் தெரிவித்தார்.

## இராணுவ ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கீகரிக்கப்பட்டு எடுக்கப் பட்டிருந்த முடிவை நடவடிக்கை எடுப்பதற்கு இப்போதாவது நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும். இந்தவிடயத்தை பல வருடங்களாக கேட்டுக் கொண்டு வருகின்றோம். ஆனாலும் எதுவும் நடைபெறாமல் உள்ளது. இதனை தடுத்து நிறுத்துவதற்கு எந்தவொரு நியாயமான காரணங்களும் கிடையாது. வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் வாழும் ஏனைய பிரதேசங்களில் முஸ்லிம் பிரிவுகள், சிங்களப் பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன. சட்டவிரோத குடியேற்றங்கள் நடந்திருந்தும்கூட அந்த சட்டவிரோதமான செயலை சட்டபூர்வமாக்குகின்ற வகையில் அந்தப் பிரிவுகளை உருவாக்க முடியுமானால், இயல்பாகவே - பூர்வீகமாக வாழ்ந்துவந்த தமிழ் மக்களுடைய பிரதேச செயலகர் பிரிவை அங்கீகரிக்க ஏன் உங்களால் முடியாதுள்ளது? என்ற கேள்வியை பிரதமர் அவர்களுடைய பொதுநிர்வாக அமைச்சுக்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

இன்று உலகத்துக்கு நல்லிணக்கத்தைப் பற்றி பேசுகின்ற நீங்கள் இதையாவது செய்யுங்கள். அரசியல் காரணங்களுக்காக - இந்த அநியாயங்கள் தமிழ் மக்களுக்கு தொடர்வதை அனுமதிக்கவேண்டாம். வேறு தரப்புகளுக்கு கிடைக்கக்கூடிய அங்கீகாரங்களை நாம் ஒருபோதும் தடுப்பவர்களல்லர். எங்களுக்கு தேவைப்படும் விடயத்தையே நாங்கள் கேட்கின்றோம்.

அடுத்த விடயமாக, -கடந்த ஒரு வாரமாக மாவீரர் வார நிகழ்வுகள் நடைபெற்றிருந்தன. மாவீரர் வாரத்தின் இறுதி நாளான நேற்றைய தினம், 27 ஆம் திகதி, வடக்கு கிழக்கு முழுவதிலும் - தமிழ் மக்கள் தங்களது எதிர்காலத்துக்காக உயிர்த்தியாகம் செய்த உறவுகளை நினைவு கூர்ந்திருந்தனர். தாங்களாகவே தங்களது சொந்தச் செலவில் முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். அப்படிப்பட்ட நிலையில் - சிறிலங்கா அரசின் இனவாத போக்கால் அனைத்து துயிலும் இல்லங்களிலும் நினைவேந்தல்களைத் தடைசெய்யவதற்காக - பொலிசார் நீதிமன்றங்களை நாடும் முயற்சிகள் நடைபெற்றிருந்தன. நீதிமன்றங்கள் தடைகளை வழங்கியிருந்தாலும், பின்னர் எங்களது நியாயங்களைப் பதிவு செய்து அந்தத்தடையை நீக்க நாங்கள் கோரியிருந்த நிலையில், வடக்கு கிழக்கில் உள்ள நீதிமன்றங்கள் தடைசெய்யப்பட்ட அமைப்புக்களை நினைவுகூராமல் நினைவேந்தலை செய்யமுடியும் என்றே தீர்ப்புகளை வழங்கியிருந்தன. கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை சம்பூரில் மட்டும்தான் தடை விதிக்கப்பட்டிருந்தது. அதனை மீள்பரிசீலனை செய்யுமாறு கோரியிருந்தும் கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருந்தது. அம்பாறையில் நினைவேந்தலை தடைசெய்யுமாறு கோரியிருந்த பொலிஸாரின் கோரிக்கை நிராகரிக்கபட்டிருந்தது.

மட்டக்களப்பில் தடைசெய்யப்பட்ட அமைப்பையோ அடையாளங்களையோ நினைவுகூரக்கூடாது என்றே தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. கிழக்கு மாகாணத்தில் முழுமையாக தடை வழங்கப்பட்டிராதபோதும் பொலிஸார் குறித்த நிகழ்வுகளை குழப்பும் வகையிலேயே செயற்பட்டிருந்தனர். பல இடங்களில் துயிலுமில்லக் காணிகளில் இராணுவமுகாம்கள் அமைக்கப்பட்டு படுமோசமாக அவமதிக்கின்ற செயற்பாடுகள் நடைபெற்றிருந்தன. அனைத்து துயிலுமில்லங்களிலும் இருந்த கல்லறைகள் அழிக்கப்பட்டிருக்கின்றன.

தனியாரின் காணிகளில் தனியாருடைய அனுமதி பெற்று நினைவேந்தல் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தபோதும்கூட



# நீரை விற்கவோ, தனியார் மயமாக்கவோ அரசியடம் எந்தவொரு திட்டமும் இல்லை

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

நீரின் தரத்தைப் பாதுகாக்கவும், செலவைக் குறைக்கவும் அரச-தனியார் கூட்டாண்மைகளை உருவாக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் நீரை விற்கவோ அல்லது தனியார்மயமாக்கவோ எவ்விதத் திட்டமும் இல்லை என்றும் நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நிலைபேற்றுத் தன்மையைப் பேணுவதற்கு நீர்க் கட்டணங்களுக்கென சூத்திரம் ஒன்று அவசியப்படுவதாகவும், அதற்கான சூத்திரத்தைதயாரிப்பதுதொடர்பான கலந்துரையாடல்கள் தற்போது இடம்பெற்று வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் ஜீவன் தொண்டமான் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் ஜீவன் தொண்டமான் -

மலையகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நான் முதலில் நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன்.

ஜனாதிபதி முன்வைத்த வரவு செலவுத்திட்டத்தின் மூலம் மலையகத்தில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்படும் என்று எதிர்க்கட்சி உறுப்பினர்களே கூறியுள்ளார்கள்.

தோட்ட உட்கட்டைமைப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதிக்கு மேலதிகமாக மலையக மக்களுக்கு காணி உரிமையை வழங்க 04 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அது மாத்திரமன்றி, பெருந்தோட்ட மேம்பாட்டுக்காக 89 பிரதேச செயலகங்களுக்கு 10 பில்லியன் ரூபா நிதி ஒதுக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார். அதனை நாம் வரவேற்கின்றோம்.

மக்களுக்கு மிக அவசியமான விடயங்களை மேற்கொள்வதற்காக அந்த நிதி பிரதேச செயலகங்கள் ஊடாக செலவிடப்படும். இதில் எந்தவித அரசியல் தலையீடும் இருக்காது. இந்தப் பணிகளைக் கண்காணிப்பதற்காக அமைச்சரவை மூலம் குழுவொன்று நியமிக்கப்படும்.

அதன்படி, தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சைப் பொறுத்தவரை, 14 பில்லியன் ரூபா ஜனாதிபதியிடம் இருந்து நேரடியாக கிடைக்கின்றது. அதனுடன் 05 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு அமைச்சின் ஊடாகக் கிடைக்கின்றது.

மேலும், 10,000 வீட்டுத் திட்டத்தின் முதல் கட்டத்தையும் ஆரம்பிக்கவுள்ளோம். அதற்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி இந்திய அரசாங்கத்தின் நிதியுதவி மூலம், வேலைத் திட்டத்தையும் ஆரம்பிக்க இருக்கின்றோம்.

இவை மாத்திரமன்றி மலையக மக்களின் 200 வருட நிறைவையொட்டி, பிரதமர் நரேந்திர மோடியால் வழங்கப்பட்ட இந்திய அரசாங்கத்தின் 3000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடும் உள்ளது.

அதுதொடர்பாகத்தற்போதுகலந்தரையாடல்கள் இடம்பெற்று வருவதுடன் தேவை-யான ஆவணங்களைத் தயார்செய்தும் வருகின்றோம்.

இந்த அனைத்துப் பணிகளையும் எதிர் வரும் 2024 மே மாதத்திற்குள் அமுல்படுத்த திட்டமிட்டுள்ளோம். இந்த விடயங்களை சிறப்பாக நடைமுறைப்படுத்தி மலையக மக்களுடைய வாழ்க்கையை மேம்பாடுத்தலாம் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது.

தோட்ட மக்களின் சம்பள விடயத்தைப் பொறுத்தவரை, இதுவரை கூட்டு ஒப்பந்தம் அவசியமில்லை என்று கூறிவந்த பலரும் இப்போது கூட்டு ஒப்பந்தம் தேவை என்று கூறுகின்றனர். எனவே, தற்போது மக்களுக்கு இந்த கூட்டு ஒப்பந்தம் தொடர்பான விடயங்கள் தெரிய வந்துள்ளன.



ஜனாதிபதி முன்வைத்த வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் தனியார் துறையினரும் சம்பளத்தை அதிகரிக்க வேண்டும்.

இந்த சம்பள உயர்வு தொடர்பில் அரசியல் ரீதியிலான தீர்மானமின்றி பொருளாதார ரீதியில் தீர்மானம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தற்போதுஇந்நாட்டில்நிலவும்பொருள்களின் விலைகளுடன் ஒப்பிடும்போது எவ்வளவு சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்று கணக்கிட்டே முடிவு செய்யப்பட வேண்டும். எதிர்காலத்தில் சம்பளம் வழங்கப்படும் பொறிமுறை மாற்றப்பட வேண்டும்.

நீரின் தரத்தைப் பாதுகாக்கவும், செலவைக் குறைக்கவும் அரச-தனியார் கூட்டாண்மைகளை உருவாக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது, ஆனால் நீரை விற்கவோ அல்லது தனியார்மயப்படுத்தவோ எவ்விதத் திட்டமும் இல்லை.

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நிலைபேற்றுத் தன்மையைப் பேணுவதற்கு நீர்க் கட்டணங்களுக்கான சூத்திரம் ஒன்று அவசியமாகும். அதற்கான சூத்திரத்தை தயாரிப்பது தொடர்பான கலந்துரையாடல்கள் தற்போது இடம்பெற்று வருகின்றன. நீர் வழங்கல் செயற்பாடுகளுக்கு அதிகமான வலுசக்திச் செலவுகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. புதுப்பித்தக்க வலுசக்தி ஆற்றலை நீர் வழங்கல் துறையில் பயன்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

நாட்டில் உள்ள 324 நீர் வழங்கல் நிலையங்களில் இதுவரை 06 நிலையங்களில் மாத்திரமே சூரியசக்தி பயன்படுத்தப்படுகின்றது.

ஏனைய அனைத்தும் மின்சாரத்தில் இயங்குகின்றன. இதனால்தான் மின் கட்டணத்தை அதிகரிக்கும் போது நீர் கட்டணத்தையும் அதிகரிக்க வேண்டியேற்பட்டது.

எனவே சூரிய சக்தியைப் பயன்படுத்தவது குறித்து வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

அடுத்த 03 ஆண்டுகளில் இதனை 25 வீதத்தினால் அதிகரிக்கவும் 2030 ஆம் ஆண்டுக்குள் 50 வீத சூரிய சக்தியை நீர் வழங்கல் துறையில் பயன்படுத்தவும் எதிர்பார்த்துள்ளோம். அதற்கு சுமார் 8507 மில்லியன் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்திற்காக தனியார் துறையின் பங்களிப்பையும் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளோம். - என்றும் நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார். (05)

# ரொஷான் ரணசிங்கவின் பதவிநீக்கம் ஆளும் தரப்பு வெட்கப்பட வேண்டும்!

## துார இந்துனில் சாட்டை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஊழலை இல்லாதொழிப்பதாக சர்வதேசத்திற்கு குறிப்பிட்டுக் கொண்டு ஊழல்வாதிகளை பாதுகாக்கிறார், ஊழலை வெளிப்படுத்துபவர்களை புறக்கணிக்கிறார்.

ரொஷான் ரணசிங்க அமைச்சு பதவியில் இருந்து நீக்கப்பட்டதையிட்டு ஆளும் தரப்பு உறுப்பினர்களும் வெட்கப்பட வேண்டும். சம்மி, சாகல பற்றி பேசினால் செய்வதென்ன என்பதை ஜனாதிபதி காண்பித்துள்ளார் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் துார இந்துனில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் சுற்றாடற்றுறை மற்றும் வனஜீவராசிகள், வனப்பாதுகாப்பு அமைச்சுக்கான செலவுத் தலைப்பு மீதான விவாதத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

கிரிக்கெட் சபையின் ஊழல் மோசடிகளை வெளிக்கொண்டு வந்த விளையாட்டுத்துறை ,நீர்பாசனம் மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் ரொான் ரணசிங்கவை ஒரு கடிதத்தின் ஊடாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவி நீக்கியுள்ளார்.

ரொஷான் ரணசிங்கவை பதவி நீக்கியுள்ளதையிட்டு மகிழ்ச்சியடைந்து கைதட்ட முடியாது. ஆளும் தரப்பு வெட்கப்பட வேண்டும். நாடு வங்குரோத்து நிலையடைவதற்கு ஊழல்மோசடி பிரதான காரணம் என்று தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் குறிப்பிடுகின்ற நிலையில் ஊழல்வாதிகள் பாதுகாக்கப்படுவார்கள் என்பதை ஜனாதிபதி உறுதிப்படுத்தியுள்ளார். ஜனாதிபதி தனது தற்றுணிவின் அளவை வெளிப்படுத்தியுள்ளார் என்றே குறிப்பிட வேண்டும்.

உகண்டா நாட்டின் முன்னாள் அதிபர் இடி அமீன் நாட்டு மக்களை சூறையாடி தம்மை வளப்படுத்தினார். அதேபோல்தான் இந்த ராஜபக்ஷர்களும் நாட்டை சூறையாடி ஒட்டுமொத்த மக்களையும் வங்குரோத்து நிலைக்குத் தள்ளியுள்ளார்கள்.

ரொஷான் ரணசிங்க, ராஜபக்சர்களுக்கு சார்பாகவே செயற்பட்டார். பொலன்னறுவை மக்கள் ரணில் விக்கிரமசிங்கவை புறக்கணித்து ராஜபக்ஷர்களுக்கு ஆதரவு வழங்கினார்கள். ராஜபக்சர்களுக்காகவே ரொான் ரணசிங்கவை நாடாளுமன்றத்துக்கு அனுப்பினார்கள். ஆனால் இன்று ரொஷான் ரணசிங்கவை ராஜபக்சர்கள் எவரும் பாதுகாக்கவில்லை, அவருக்காகக் குரல்கொடுக்கவுமில்லை.

கிரிக்கெட் சபையின் தலைவர் சம்மி சில்வா, தனது ஆலோசகர் சாகல ரத்நாயக்க ஆகியோர் தொடர்பில் பேசினால் செய்வதென்ன என்பதை ஜனாதிபதி வெளிப்படுத்தியுள்ளார். 69 லட்ச மக்களாணை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் அடிபணிந்துள்ளது. இன்று ரொஷான் ரணசிங்க வெட்டப்பட்டுள்ளார்.

ஊழலை இல்லாதொழிப்பதாக ஜனாதிபதி சர்வதேசத்திடம் குறிப்பிடுகிறார்.

மறுபுறம் ஊழல்வாதிகளை அடையாளப்படுத்தும் தரப்பினருக்கு எதிராக செயற்பட்டு,ஊழல்வாதிகளை பாதுகாக்கிறார். இதுவே ஜனாதிபதியின் உண்மை முகம்.ஜனாதிபதியினதும்,இந்த அரசாங்கத்தினதும் காலம் வெகுவிரையில் முடிவுக்கு கொண்டு வரப்படும். - என்றார். (05)

# நாட்டுக்கு வரவுள்ள சர்வதேச கிரிக்கெட் சபை தலைவரை நாடாளுமன்றம் அழைக்கவேண்டும்

## சஜித் சபாநாயகரிடம் கோரிக்கை

சர்வதேச கிரிக்கெட் பேரவையின் தலைவரை சந்தித்து இலங்கை கிரிக்கெட் சபையின் ஊழல் மோசடிகள் தொடர்பாக தெளிவுபடுத்த எமக்கு சந்தர்ப்பத்தைஏற்படுத்தித்தரவேண்டும்.

அதற்காக எதிர்வரும் சில தினங்களில் நாட்டுக்கு வரவிருக்கும் சர்வதேச கிரிக்கெட் பேரவையின் தலைவர், நாடாளுமன்றத்துக்கு வருமாறு அவருக்கு அழைப்பு விடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் திங்கட்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

சர்வதேச கிரிக்கெட் பேரவையின் தலைவர் எதிர்வரும் சில தினங்களில் இலங்கைக்கு வர இருக்கிறார் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.



அதனால் ஊழல் மோசடி மிக்க இலங்கை கிரிக்கெட் சபையை நீக்கி, புதிய நிர்வாக சபை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என நாடாளுமன்றத்தில் ஆளும், எதிர்க்கட்சி இணைந்து அனுமதிக்கப்பட்ட பிரேரணை தொடர்பாக அவருக்குத் தெளிவுபடுத்த எங்கள் அனைவருக்கும் சந்தர்ப்பம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும்.

அதற்காக சர்வதேச கிரிக்கெட் பேரவையின் தலைவரை இந்த நாடாளுமன்றத்துக்கு அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறிப்பாக, தற்போதைய இலங்கை கிரிக்கெட் சபை, பாரிய ஊழல் மோசடிகளில் ஈடுபட்டுக்கொண்டு, எவ்வாறு ஜனநாயகம் என்ற பெயரில் இலங்கை கிரிக்கெட் தொடர்பாகவும் எமது நாடு தொடர்பாகவும் சர்வதேச கிரிக்கெட் பேரவைக்கு கோள் சொல்லி காட்டிக்கொடுத்து வருகிறது என்பதை சர்வதேச கிரிக்கெட் பேரவையின் தலைவருக்கு விளங்கப்படுத்த வேண்டிய பொறுப்பு எங்களுக்கு இருக்கிறது.

அதனால் சர்வதேச கிரிக்கெட் பேரவையின் தலைவர் நாட்டுக்கு வரும்போது, எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேரும் அவரை சந்திக்க நீங்கள் முன்னின்று செயற்பட வேண்டும். இல்லாவிட்டால், இலங்கை கிரிக்கெட் சபை சர்வதேச கிரிக்கெட் பேரவைக்கு பிழையான கருத்துக்களையே கொண்டு செல்லும். - என்றார். (05)

# வன விலங்குக்கு பிரயோகிக்கப்பட்ட துப்பாக்கி சூட்டில் ஒருவர் படுகாயம்

*மட்டக்களப்பு - வாகரை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டமுறு வனப் பகுதியில் திங்கட்கிழமை வன விலங்குகளை நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளார் என வாகரை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*காயமடைந்தவர் மட்டக்களப்பு - கதிரவெளி பிரதேசத்தை சேர்ந்த 50 வயதுடைய நபராவார்.*

*இவர் காயமடைந்த நிலையில் வாழைச்சேனை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*வாகரை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் துப்பாக்கி சூட்டை நடத்தியவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாகரை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)*

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சாக்குப் போக்கு சொல்வதை நிறுத்தவேண்டும் ஆளும் தரப்பு

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு ஆளும் தரப்பு தயார் என்றும் எந்த முறையின் கீழ் தேர்தலை நடத்துவது என்பது தொடர்பில் எதிர்க்கட்சியினர் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்தால் தேர்தலை நடத்திவிட முடியும் என்றும் தலைமை அமைச்சர் தினேஸ் குணவர்த்தன நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

''மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் முறைமை தொடர்பில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் வித்தியாசமான யோசனைகளை முன்வைக்கின்றனர். மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் முறைமைக்கு அவர்கள் இணக்கம் தெரிவித்தால் நாம் தேர்தலை நடத்த முடியும்.

மாகாண சபைத் தேர்தல்கள் பழைய முறையிலும் மற்றவை புதிய முறையிலும் நடத்தப்பட வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் கூறுகின்றனர். ஆனால், மாகாண சபைத் தேர்தல் தொடர்பான தெரிவுக்குழுவில் எந்தவொரு கட்சியும் இணக்கப்பாட்டுக்கு வரவில்லை" என்றார்.

பிரதமரின் உரை தேர்தலைப் பின்போடுவதற்கான சாக்குப் போக்குச் சொல்லும் வகையில் அமைந்திருக்கின்றதே தவிர, உண்மையான அக்கறையோடு சொல்லப்பட்டதாக இல்லை என்றே படுகின்றது.

மாகாண சபைத் தேர்தலை புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட உள்ளூராட்சி சபைகள் தேர்தல் சட்டத்தின் கீழ் நடத்துவது தொடர்பில் கட்சிகளிடையே இணக்கப்பாடு ஏற்படவில்லை என்பது உண்மை. ஆனால் அது காலங்கடந்த உண்மை. கடைசியாக நடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பெரும்பாலான சபைகளுக்கு தெளிவான முடிவு ஒன்று கிட்டவில்லை. தொங்கு சபைகளே அமைந்தன. அதாவது எந்தவொரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மையைப் பெறமுடியவில்லை.

பிரதிநிதித்துவமற்றும்தொகுதிமுறைஆகியவற்றைக் கலந்து புதிய தேர்தல் முறையின் கீழ் தேர்தல் நடத்தப்பட்டதால் இந்த நிலை ஏற்பட்டதாகக் கருதிய கட்சிகள் மாகாண சபைக்கும் அதே தேர்தல் முறையின் கீழ் வாக்கெடுப்பு நடத்தப்பட்டால், அங்கும் இதுபோன்றே தொங்கு சபைகளே அமையும் என்று அஞ்சின. அதன் காரணமாக பழைய தேர்தல் முறைக்குத் திரும்ப விரும்பின. ஆனால், சிறு கட்சிகள் அதனை எதிர்த்தன. புதிய முறையின் கீழ் அவற்றுக்கு அதிக பயன்கள் இருந்ததால் அவை பழைய முறையை நிராகரித்தன.

இந்த இழுபறியின் காரணமாகவே நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் முன்வைக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டமூலத்தை தொடக்கத்தில் நிறைவேற்ற முடியாமல் போனது. ஆனால், இந்த இழுபறி காரணமாக மாகாண சபைத் தேர்தல்காலவரையறையின்றிப்பிற்போடப்படுவதைக் கண்டபின்னர்பழைய முறைக்கேதிரும்பித் தேர்தலை நடத்துவதற்கு மனோ கணேசனின் இலங்கை ஜனநாயக மக்கள் முன்னணி கட்சி போன்ற சிறு கட்சிகள் ஏற்கனவே இணக்கம் தெரிவித்துவிட்டன.

புதிய தேர்தல் முறையைக் கைவிடத் தாங்கள் விரும்பவில்லை என்றபோதும் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்கிற ஒரே நோக்கத்துடன் பழைய முறைக்குத் திரும்ப இணங்குவதாக மனோ கணேசன் பகிரங்கமாகவே அறிவித்திருந்தார். பழைய தேர்தல் முறைமைக்குத் திரும்புவதை எதிர்த்த முக்கியமான தலைவர்களில் அவரும் ஒருவர்.

அப்படியிருக்கும்போதுபழியைஎதிர்க்கட்சியினர்மீது போட்டுவிட்டு தேர்தலைத் தொடர்ந்தும் பிற்போடுவதை ஏற்கமுடியாது. சட்டத் திருத்தத்தை மேற்கொண்டு தேர்தலை உடனடியாக நடத்தவேண்டும் அரசு.

# அவர்களுக்குள் சஜித் வேறு!

உபுல் யோசப் பெர்னான்டோ



"அவர்கள் எல்லோரும் நண்பர்கள் தம்பி..."

ரஞ்சன் ராமநாயக்கவின் இந்தக் கூற்று இலங்கையில் மிகவும் பிரபலமான முழக்கங்களில் ஒன்று. இலங்கையில் நடக்கும் திருட்டைப் பற்றிப் பேசும் ரஞ்சன், தனது கதையை ஐந்து நட்சத்திர விடுதியிலோ அல்லது கிராமத்து பஜாரிலோ அல்லது முச்சக்கர வண்டியிலோ முடிக்கும்போது, இந்தக் கதை சரிதான் என்றே முடிக்கிறார்.

திருட்டுக்கு எதிரான இலங்கையின் முதல் தேர்தல் போராட்டம் 1994இல் நடந்தது. அது சந்திரிகாவின் ஊழல் மற்றும் பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டம். 1994இல் சந்திரிகாவும் சிறீ லங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான தேசிய முன்னணியும்அப்போதுஆட்சியாளர்களாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் 17 வருடகால ஊழல் பட்டியலை முன்வைத்தனர். அவர்களின் ஊழல் பற்றி பொது மேடைகளில் சந்திரிகா பேசினார். திருடர்கள் காலி முகத்திடலுக்கு கொண்டு வரப்படுவார்கள் என்று அவர் சொன்னார். ஊழலை நிறுத்தினால் நாட்டில் அப்பம் ஒன்றை 3.50 ரூபாய்க்கு விற்கலாம் என்றார். அப்படிச் சொல்லித்தான் 17 வருட ஐ.தே.க. ஆட்சியை வீழ்த்தி அதிகாரத்திற்கு வந்தார்.

பதவிக்கு வந்ததும் அதற்கும் முன்னைய ஆட்சியில் நடந்த ஊழல்களை விசாரிக்க லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவை அமைத்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சர்களின் ஊழல் மோசடிகளை இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தேட ஆரம்பித்தது.

கனகாலம் செல்லவில்லை, இலஞ்ச ஆணைக்குழுவில் ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சர்கள் சந்திரிகாவிடம் சரணடையத் தொடங்கினார்கள். அவரும் அவர்களுடன் ஒப்பந்தங்களை மேற்கொள்ளத் தொடங்கினார். இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் ஊழல் கோப்புகளைப் பயன்படுத்தி நாடாளுமன்றத்தில் தனக்குத் தேவையான பெரும்பான்மையை உருவாக்கிக் கொண்டார் சந்திரிகா. அதன் மூலம் அரசியல் தீர்வுப் பொதி ஒன்றை முன்வைப்பதற்குத் தேவையான மூன்றில் இரண்டு பங்கைப் பெற்றுக்கொண்டார்.

அதுமட்டுமல்ல லஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் சிக்கிக் கொண்ட ஐ.தே.க. முன்னாள் அமைச்சர்களிடம் கோப்புகளைக் காட்டிமிரட்டினார். கட்சித் தலைவர் ரணிலுக்கு எதிராக கிளர்ச்சி செய்யுமாறு அறிவுறுத்தினார். இறுதியில், அவர் சொன்னபடியே கட்சிக்குள் குப்பங்களை ஏற்படுத்திய ஐ.தே.கவின் முக்கியஸ்தர்கள், ஊழல் குற்றச்சாட்டுக்களில் இருந்து தப்புவதற்காக, சிறைக்குச் செல்வதைத் தவிர்ப்பதற்காக சந்திரிகாவின் ஆட்சியுடன் இணைந்தனர்.

2005இல் ஜனாதிபதியாக வந்த மஹிந்தவும் சந்திரிகாவைப் பின்பற்றி அவர் செய்ததையே செய்தார். 2002 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளின் ஊழல் ஐ.தே.க. ஆட்சியில் அந்தக் கட்சியின் அமைச்சர்கள் நாடாளுமன்றத்தின் கோப் குழுவினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்கள் எல்லோரது கோப்புகளும் தன்னிடம் இருப்பதாகவும், நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பயமுறுத்திவிட்டு "சலூன்" கதவு திறக்கப்பட்டதாகவும் கூறினார்.

2005இல் மகிந்த ஆட்சிக்கு வந்தது திருட்டை பிடிப்பதற்காக அல்ல, போரில் வெற்றி பெறுவதற்காக. 2005 முதல் 2014 வரை, இலங்கை அரசியல் திருட்டுக்கு எதிராக அல்ல, தேசபக்திக்கு ஆதரவாகவே இருந்தது. இந்த நிலை 2014இல் முதன்முறையாக மாறியது. 2014இல் ராஜபக்ச குடும்பத்தின் திருட்டுகள் குறித்து நாட்டில் பெரிய விவாதம் நடந்தது. சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன, திருட்டை சகித்துக் கொள்ள முடியாது என்று கூறி அந்த ஆட்சி 'யிலிருந்து வெளியேறினார்.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் தினத்தன்று கட்டுநாயக்க விமான நிலையத்தை மூடிவிட்டு திருடர்களை ஒடுக்குவோம் எனச் சபதம் செய்தார். திருடர்களைக் கண்டுபிடித்து ராஜபக்ச குடும்பத்தையும், அந்தக் குடும்பத்திற்கு ஆதரவான அமைச்சர்களையும் சிறைக்கு அனுப்புவேன் என்று ரணிலும் அப்போது உறுதியளித்தார். 2015 மைத்திரி ஜனாதிபதியானார். ரணில் பிரதமரானார். திருடர்களை பிடிக்க ஐ.தே.க. மற்றும் சிறீ லங்கா சுதந்திரக் கட்சி ஆகியன இணைந்து தேசிய ஆட்சியை அமைத்தன. சிறப்பு நிதிக் குற்ற விசாரணைப் பிரிவு உருவாக்கப்பட்டது.

அதிக காலம் எடுக்கவில்லை. திருடர்களைப் பிடிக்கச் சென்ற மைத்திரியையும் ரணிலையும் திருடர்கள் பிடித்தனர். இருவரும் போட்டி போட்டுக்கொண்டு திருடர்களுடன் ஒப்பந்தம் செய்யத் தொடங்கினர். மைத்திரியின் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியைப் பலவீனப்படுத்த ராஜபக்சவை புதிய கட்சியை உருவாக்க ரணில் கட்டாயப்படுத்தினார். ரணிலையும் ஐ.தே.கவையும் ராஜபக்சக்கள் பலவீனப்படுத்த வேண்டும் என்று மைத்திரி விரும்பினார்.

ராஜபக்சக்களும் அவர்களது நாடாளுமன்ற உறுப்பினர்களும் மைத்திரிக்கு இரகசியமாகத் தகவல் கொடுத்தது போலவே ரணிலுக்கும் தகவல் கொடுத்தார்கள். மைத்திரி பிடித்த திருடனை ரணில் விடுவித்தார், ரணில் பிடித்த திருடனை மைத்திரி விடுவித்தார்.

"அவர்கள் எல்லோரும் நண்பர்கள் தம்பி..."

மைத்திரி மற்றும் ரணில் இருவரும் திருடர்களைப் பிடிக்கும் விதத்தைப் பார்த்து ரஞ்சன் இந்தக் கதையைச் சொன்னார். ரஞ்சனின் கதை சரிதான். மைத்திரி இறுதியில் ரணிலைப் பிரதமர் பதவியில் இருந்து வெளியேற்றி மஹிந்தவைப் பிரதமராக்கினார். பின்னர் பொது ஜன பெரமுனவில் இருந்து தேர்தலில் போட்டியிட்டார். ராஜபக்சேவை பாதுகாக்கவே ரணில் பிரதமர் பதவியையும் அதிபர் பதவியையும் ஏற்றுக்கொண்டார்.

2019இல் கோட்டாபய ஜனாதிபதியானாலும், ரணில் மத்திய வங்கி பிணை முறிப் பத்திர மோசடிக்காகச் சிறையில் அடைக்கப்படுவார், ஈஸ்டர் தாக்குதலுக்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றெல்லாம் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கோத்தா ஜனாதிபதியாக வருவதற்கு ரணிலின் ஆதரவும் மைத்திரியின் ஆதரவும் தேவைப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருக்கும் பிரச்சினைகளை தீர்க்கவும், சஜித்தின் காலை இழுத்து சஜித்தை தோற்கடிக்கவும் ரணிலின் ஆதரவு அவர்களுக்குத் தேவைப்பட்டது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வாக்குகளைப் பெற மைத்திரி தேவைப்பட்டார். இதனால் கோட்டாபய ஜனாதிபதியான பின்னர் ரணிலோ அல்லது மைத்திரியோர் அவரிடம் கையேந்த வேண்டிய நிலை ஏற்பட்டது. சஜித்தை ரணில் அழிக்க வேண்டும் என்று ராஜபக்ச குடும்பம் விரும்பியது. அதனால்தான் ரணில் நாடாளுமன்றத்திற்கு வர வேண்டும் என மஹிந்த பகிரங்கமாக கூறினார்.

இலங்கையில் திருடர்களைப் பிடிக்க முடியாததற்கு மிகப் பெரிய காரணம், ஆட்சிக்கு வரும் தலைவர்கள், ஆட்சிக்கு வந்த பிறகு, தங்கள் அதிகாரத்தைக் காப்பாற்றிக்கொள்ள திருடர்களுடன் ஒப்பந்தம் போடுவதுதான்.

இவர்கள் எல்லோருக்கும் மாறாக, மாற்றாக சஜித் பிரேமதாச தன்னிடம் ஒப்பந்த அரசியல் இல்லை என்று கூறி ஐக்கிய மக்கள் சக்தி என்ற புதிய கட்சியை உருவாக்கினார். 2022 போராட்டத்தின் போது சஜித் கோத்தாவுடன் ஒப்பந்தம் செய்து பிரதமர் பதவியை ஏற்றிருக்கலாம். ஆனால் கோட்டா நிறைவேற்று அதிகாரங்களை பிரதமர் பதவிக்கு மாற்றாவிட்டால் பிரதமர் பதவியை ஏற்கமாட்டேன் என சஜித் அடம்பிடித்தார்.

அதேபோன்று, குறிப்பிட்ட கால எல்லைக்குள் ஜனாதிபதி பதவியிலிருந்து கோட்டாபய விலக வேண்டும் எனவும் நிபந்தனை விதித்தார்.

ரணில் அதிபராக இருந்த போது ராஜபக்ச குடும்பத்துடன் சஜித் டீல் போட்டு ராஜபக்ச குடும்பத்திற்கு அடிபணிந்திருக்க முடியும்.

''பட்ஜெட்டை முறியடிக்க நாங்கள் தயாராக உள்ளோம். ஆனால் எதிர்கட்சிகள் ஒன்றாகி வந்து எங்களுடன் பேச வேண்டும்" என்று அடுத்த ஆண்டு வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட போது நாமல் ராஜபக்ச கூறினார். ரணில் தனது பரம எதிரியாக இருந்தாலும், சஜித் ராஜபக்சக்களை வெள்ளையடித்து ராஜபக்சவுடன் ஒப்பந்தம் போடப் போவதில்லை என்பதையே இது காட்டுகிறது. இன்று சஜித் இருக்கும் இடத்தில் ரணில் அல்லது ராஜபக்சே இருந்திருந்தால் எதிரியை நண்பனாக்கி அவனுடன் ஒப்பந்தம் செய்திருப்பார்கள்.

சஜித் அதே விளையாட்டை விளையாடவில்லை. ராஜபக்சக்கள் நாட்டை திவாலாக்கிய போது, ஐக்கிய மக்கள் சக்தியின் புலனாய்வு சபையின் தலைவரான கட்சியின் செயற்குழு உறுப்பினர் கலாநிதி மஹிம் மெண்டிஸுக்கு ராஜபக்சவுக்கு எதிராக நீதிமன்றம் செல்லும் தைரியத்தை வழங்கினார். வெற்றிகரமான போராட்டத்தை ஒருங்கிணைப்பதில் பெரும் பங்காற்றிய மாஹிம் மெண்டிஸ் ஒரு பல்கலைக்கழக பேராசிரியராக இருந்தார்.

'இப்போது ராஜபக்சக்கள் வீழ்ந்துள்ளனர். ராஜபக்சக்களைக் காப்பாற்றி ராஜபக்சக்களுடன் ஒப்பந்தம் செய்து ரணிலை முடிப்போம்...' சஜித்துக்கு இதுபோன்ற பல முன்மொழிவுகள் கிடைத்தன. ஆனால் அந்த ஒப்பந்தங்களில் அவர் சிக்கவில்லை. வழக்கை தொடருமாறு டாக்டர் மஹிம் மெண்டிஸுக்கு அவர் அறிவுறுத்தினார். பிரபல சட்டத்தரணி உபுல் ஜயசூரிய இந்த வழக்கை ஊக்குவித்தார். நீதிமன்றத்தின் தீர்ப்புக்குப் பிறகு, அவர் இப்போது நாடாளுமன்றத்திற்குப் போராட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார். இப்போது போராட்டம் வீதிக்கு வந்துள்ளது.

நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் திருடர்களைப் பிடிப்போம் என்று இலங்கையில் எதிர்க்கட்சிகள் எப்போதும் கூறுகின்றன. ஆனால் இலங்கையின் அரசியல் வரலாற்றில் முதன்முறையாக ஐக்கிய மக்கள் சக்தி மட்டுமே எதிர்க்கட்சியில் இருக்கும்போதே திருடர்களை நீதிமன்றத்தின் மூலம் தண்டிக்க ஆரம்பித்துள்ளது.

"அவங்கஎல்லாரும்நண்பர்கள் தம்பி..." என்று கூறிய ரஞ்சன்கூட இன்று அது தவறு என்கிறார்.

"அவர்கள் எல்லாம் நண்பர்கள் இல்லை அண்ணா..." என்று ரஞ்சனின் கூற்றையே மாற்ற வைத்திருக்கிறது நாட்டைத் திவலாக்கியவர்களுக்கு எதிரான நீதிமன்றத் தீர்ப்பு.

# ஜனாதிபதி மீது நம்பிக்கையற்றவர்கள் அரசிலிருந்து உடன் வெளியேறலாமாம்

## இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் அதிரடி கருத்து



ஜனாதிபதி மீது நம்பிக்கை இல்லாவிட்டால் அவர் தொடர்பில் விமர்சனங்களை முன்வைப்பதை விடுத்து அரசாங்கத்திலிருந்து விலகிச் செல்வதற்கு எவருக்கும் உரிமை உள்ளது.

அத்துடன் முரண்பட்டுக்கொண்டு அமைச்சரவைக்குள் இருப்பதைவிட ஒதுங்கிக்கொள்வதே நல்லது என ஆரம்ப கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு செலவு திட்டத்தில் சுற்றாடல் அமைச்சு, வனஜீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சுகளுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

ஒரு மாத காலமாக கிரிக்கெட்டின் பெயரை வைத்து அரசாங்கத்தை விமர்சிக்கும் நடவடிக்கைகளில் சிலர் ஈடுபட்டு வந்துள்ளனர்.

அரசாங்கத்தை கவிழ்ப்பதே சிலரது தேவையாக உள்ளது. ஜனாதிபதி மீது நம்பிக்கை இல்லை என்று கூறிக்கொண்டு அரசாங்கத்திற்குள் தொங்கிக்கொண்டு அவர்கள் இருக்கின்றனர். நாங்கள் யாரையும் பிடித்து வைத்துக்கொண்டிருக்கவில்லை. விரும்பியவர்கள் எதிர்க்கட்சியில் அமர்ந்துகொள்ளலாம்.

அத்துடன் அடுத்த வருடம் தேர்தலுக்கான குறித்த காலம் வரை இந்த அரசாங்கமே தொடரும். அந்த வகையில் ஜனாதிபதியை அசௌகரியத்துக்கு உள்ளாக்கும் எவருக்கும் அதற்கான வாய்ப்பை வழங்க முடியாது. அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இல்லாதவர்கள் விலகிச் செல்ல முடியும். அமைச்சரவையில் முரண்பட்டுக்கொண்டு இருக்க முடியாது. அவ்வாறு இருக்க முடியாதவர்கள் அதிலிருந்து ஒதுங்கிக்கொள்ள வேண்டும். அமைச்சுப்பதவிகளை பெற்றுக்கொள்ள அரசாங்கத்தில் பலர் இருக்கின்றனர். - என்றார். (05)

# சிறையிலிருந்து வந்த நபர் சடலமாக மீட்பு

சிறையில் இருந்து பிணையில் வந்த 22 வயதான நபர் ஒருவர் கிளிநொச்சி ரயில் வீதிக்கு அருகே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கொலை வழக்கொன்றுடன் தொடர்பு பட்ட சந்தேகநபரே இவ்வாறு மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (05)

# வைத்தியசாலைக் குளியல் அறையில் தாதியை காணொளி எடுத்தவர் கைது

காலி - உடுகம பிரதேசத்தில் வைத்தியசாலை ஒன்றின் குளியலறையில் ஆடை மாற்றிக்கொண்டிருக்கும் தாதியை கையடக்க தொலைபேசியில் காணொளி எடுத்ததாக குற்றம்சாட்டப்பட்ட குறித்த வைத்தியசாலை பணியாளர் உடுகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டடவர் வைத்தியசாலையில் பணிபுரியும் பணியாளரான காலி - வலஹந்துவ பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடையவராவார்.

பாலியல் துஷ்பிரயோக குற்றத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இவர் உடுகம நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்ப்படுத்தப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)

# ஐஸ் போதைப் பொருளை பாடசாலையின் மாணவர்களுக்கு விநியோகித்தவர் கைது

நீண்ட காலமாக பாடசாலை மாணவர்களுக்கு ஐஸ் போதைப்பொருள் உட்பட பல்வேறு போதைப் பொருள்களை விநியோகித்து வந்தவர் பெரிய நீலாவணை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பெரியநீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த திங்கட்கிழமை மாலை 43 வயதுடைய போதைப்பொருள் வியாபாரி சந்தேகத்திற்கிடமாக நடமாடுவதாக பெரியநீலாவணை பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரி ஜே.எஸ். கே. வீரசிங்க தலைமையிலான குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றினை அடுத்து மேற்கொண்ட விசேட சுற்றி வளைப்பின் போது சந்தேக நபர் கைதானார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் நீண்ட கால மாக பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து குறித்த போதைப்பொருளை விநியோகித்துள்ளதுடன் அவர் வசம் இருந்து ஒரு தொகை ஐஸ்போதைப்பொருளும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கைதானவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுத்த பொலிஸார் நடவடிக்கை முன்னெடுத்து வருகின்றனர். (05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee
Chikne Fried Rice with Vegetable
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# இராகலையில் கைதான வர்த்தகர் நீர்கொழும்புச் சிறையில் இறப்பு

## எப்படி நிகழ்ந்ததென மனைவி சந்தேகம்

நீர்கொழும்பு பொலிஸாரால் இராகலை நகரில் கைதுசெய்து கொண்டு செல்லப்பட்ட இரும்புப் பொருள்கள் விற்பனை நிலையம் ஒன்றின் உரிமையாளர் நீர்கொழும்பு சிறைச்சாலையில் தன் உயிரை ம ாய்த்துக் கொண்டார் என்று சொல் லப்படும் சம்பவம் இராகலையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இராகலை மத்திய பிரிவு தோட்டத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான கோவிந்தசாமி கிருஷ்ணகுமார் (வயது - 40) என்ற குடும்பஸ்தர் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என இவரின் குடும்பத்தார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்த குடும்பஸ்தரின் உடல் நீர்கொழும்பு வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக் கப்பட்டுள்ளதை உறுதி செய்துள்ள உயிரிழந்தவரின் மனைவி வடிவேல் விஜயகௌரி தனது கணவரின் மரணத்தில் சந்தேகம் நிலவுவதாக வைத்தியசாலையில் இடம்பெற்ற விசாரணையில் தெரிவித்துள்ளதாகத் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மே லும் தெரியவருவதாவது -

இராகலைதோட்டம்மத்திபிரிவைச் சேர்ந்தவர்கோவிந்தசாமிகிருஷ்ணகும ார். இவர் சுமார் எட்டு வருடங்களாக இராகலை நகரில் ஹாட்வெயர் கடை ஒன்றை நடத்தி வருகிறார்.

இவர் நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரிடம் தனது கடைக்கு சுமார் ஆறு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கடனாகப் பெற்றுள்ளார்.

இவர் பெற்ற கடனைச் செலுத்துவதில் முரண்பாடுகள் ஏற்பட்ட நிலையில் இவருக்கு எதிராக நீர்கொழும்பு நீதிமன்றில் வழக்கு ஒன்றும் தொடரப்பட்டு வர்த்தகருக்கு வழங்கப்படவேண்டிய கடன் பணம் தவணை முறையில் செலுத்தப்பட்டு வந்துள்ளது.

இருப்பினும் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கிற்கு வழக்காளி யான கோ.கிருஸ்ணகுமார் இரண்டு முறை ஆஜராகாத நிலையில் அவருக்கு நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

இந்நிலையில் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய நீர்கொழும்பு பொலிஸார் கடந்த வியாழன் அன்று இராகலை நகருக்கு கார் ஒன்றில் வருகை தந்து ஹாட்வெயர் வர்த்தகரான கிருஸ்ணகுமாரைக் கைதுசெய்து அவரை இராகலை பொலிஸ் நிலையத்தில் ஆஜர் செய்துள்ளனர்.

பின் இராகலை பொலிஸ் நிலையத்தில் விசாரணைகள் மே ற்கொள்ளப்பட்டு கிருஸ்ணகுமாரை வலப்பனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது இவரை 29 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க நீதிவான் உந்தரவிட்டுள்ளார்.

இதையடுத்து சிறைச்சாலை அதி காரிகள் பதுளை சிறைச்சாலைக்கு கொண்டு சென்றுள்ளனர். இந்த நிலையில் அடுத்த நாள் வெள்ளிக்கிழமை பதுளை சிறைச்சாலைக்குசென்றுபார்வையிட்ட குடும்பத்தார் கிருஸ்ணகுமாருக்குத் தேவையான பொருள்களையும் பெற்றுக் கொடுத்துள்ளனர்.

அதேநேரத்தில் தன்னை புதன்கிழமைநீர்கொழும்புநீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்காக அங்கு எனக்கு பிணை எடுப்பதற்கு நடவடிக்கை எடுங்கள் என கிருஸ்ணகுமார் தெரிவித்தார் எனக் குடும்பத்தார் தெரிவித்தனர்.

இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை இரவு இராகலை பொலிஸார் இருவர் கிருஸ்ணகுமாரின் வீட்டுக்கு வருகை தந்து கிருஷ்ணகுமார் நீர்கொழும்பு சிறைச்சாலையில் தூக்கிட்டு தன்னுயிரை மாய்த்து கொண்ட நிலையில் சடலம் நீர்கொழும்பு வைத்தியசாலையில் வைக்கப்பட் டுள்ளதாக அதிர்ச்சித் தகவலைத் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து கிருஸ்ணகும ாரின் மனைவி விஜயகௌரி மற்றும் கிருஸ்ணகுமாரின் சகோதரர்கள் இருவர் நேற்று திங்கட்கிழமை அதி காலைநீர்கொழும்புக்குசென்றுவைத்தி யசாலையில்பிரேதபரிசோதனைக்காக வைக்கப்பட்டிருந்த கிருஸ்ணகும ாரின் உடலைப் பார்வையிட்டு அங்கு சம்பவம் தொடர்பாக மரண விசாரணைக்காக வருகை தந்திருந்த நீர்கொழும்பு மாவட்ட நீதிவான் முன் அடையாளம் காண்பித்துள்ளார்.

இதன்போது தனது கணவரின் உயிரிழப்பில் சந்தேகம் நிலவுவதாக கிருஸ்ணகுமாரின் மனைவி நீதி வானிடம் தெரிவித்துள்ளார். இதை தொடர்ந்துசம்பவம்தொடர்பில்மேலதி க விசாரணைகளை முன்னெடுத்து நீதிமன்றத்திற்குபொலிஸார்விரைவாக அறிக்கைசமர்பிக்குமாறும்சடலத்தை பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் கையளிக்கு மாறும் நீதிவான் உத்தரவிட்டதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

(05)

# கொட்டாவையில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் சாவு

கொட்டாவை - அத்துருகிரிய அதிவேக வீதியின் 3 ஆவது மைல் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை இடம்பெற்றுள்ளது.

எம்பிலிபிட்டிய, செவனகல, பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடுவெல அதிவேக நெடுஞ்சாலையின் எம்பிலிப் பிட்டிய பகுதியில் வைத்து அவர் விபத்திற்குள்ளான லொறியில் ஏறியுள்ளார் என விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

குறித்த விபத்தில் லொறியின் சாரதி காயமடைந்துள்ளதுடன், பெண்ஹோமாகமஆதாரவைத்தி யசாலைக்கு கொண்டுசெல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

கடுவெலயிலிருந்துகொட்டாவ நோக்கி பயணித்த லொறி, அத்துருகிரிய3ஆவதுமைல்பகுதி யில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மற்றுமொரு லொறியுடன் பின்பகுதியில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# உயிரிழந்ததாகக்கூறி அடக்கம் செய்யப்பட்ட நபர் 3 நாள்களின்பின் உயிரோடு வந்ததால் அதிர்ச்சி

உயிரிழந்தார் எனக் கூறி அடக்கம் செய்யப்பட்டு மூன்று நாள்கள் கழித்து மீண்டும்உயிருடன்வந்தவரை பார்த்த உறவினர்கள் அதிர்ச்சி யடைந்துள்ளனர்.

கம்பளையில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது -

கம்பளை பஸ் நிலையத்தில் இரண்டு மாதங்களுக்கு முன்னர் மாரடைப்பால் ஒருவர் உயிரிழந்துள்ளார். அவரின் சடலம் அடையாளம் காணப்படாதநிலையில்இரண்டு மாதங்களாக கம்பளை வைத்தி யசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், கம்பளை, மேரிவில வத்த பகுதியைச் சேர்ந்த ஒரு பெண் உட்பட சிலர் வைத்தியசாலைக்குச் சென்று தமது 59 வயதுடைய மகன் லாசர் மைக்கேலின் சடலம் அது எனக் கூறி குறித்த சடலத்தை அடையாளப்படுத்தியுள்ளார்கள்.

இந்நிலையில், பிரேத பரிசோதனை செய்யப்பட்ட பின்னர் குடும்பத்தினர் சடங்குகள் செய்து சடலத்தை அடக்கம் செய்தனர்.

இந்நிலையில், அடக்கம் செய்யப்பட்டு மூன்று நாள்கள் கழித்து உயிரிழந்துவிட்டதாகக் கருதப்பட்ட நபர் வீடு திரும் பியுள்ளார்.

அதிர்ச்சியடைந்த குடும்பத்தார் சம்பவம் குறித்து அவருக்குத் தெரிவித்து தி டீர் இறப்பு விசாரணை அதி காரி அலுவலகத்தில் ஆஜரா னார்கள்.

சம்பவம்தொடர்பில்கம்பளை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

(05)




காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கையின் பிரச்சினையை இந்திய அரசுக்கு புரியவில்லை

## முத்தையா முரளிதரன் வேதனை



இலங்கை உள்நாட்டுப் போரின் போது இந்தியா, குறிப்பாக தமிழ் நாட்டு அரசுகள் இனக் கலவரத்தைப் புரிந்துகொள்ளத் தவறிவிட்டன என்று புகழ்பெற்ற சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தெரிவித்தார்.

கோவாவில் நடைபெற்ற இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் அவரது வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட ஸ்போர்ட்ஸ் பயோபிக் திரைப்படம் குறித்த மாஸ்டர் கிளாஸ் அமர்வின் போது அவர் இதை பேசினார்.

'இலங்கையில் உள்ள பிரச்சினையை... இந்தியா ஒருபோதும் புரிந்து கொள்ளவில்லை. இது உண்மை. அதைச் சொல்ல எனக்குப் பயமில்லை... இந்தியா என்றால் மத்திய அரசை நான் சொல்லவில்லை.

தமிழக அரசுக்கு அங்குள்ள உண்மையான பிரச்சனை என்னவென்று புரியவில்லை. ஏனெனில் இலங்கையில் இது மிகவும் வித்தியாசமானது. இலங்கையில் தமிழ் சமூகத்தில், பல துணைக்குழுக்கள் உள்ளன. இது அனைத்தும் இணைக்கப்பட்டுள்ளது. ஆனால் அரசியல் ரீதியாக பிரிக்கப்பட்டுள்ளது.

எனது தாத்தா தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். 1920களில் தேயிலைத் தோட்டங்களுக்கு வேலைக்காக இலங்கை சென்றார். ஆங்கிலேயர்கள் எங்களை வலுக்கட்டாயமாக அங்கு அழைத்துச் சென்றனர். அதனால்தான் இலங்கையில் எங்கள் தலைமுறை உருவானது. நாங்கள் அனைவரும் மத்திய மலைநாட்டில் வளர்ந்தோம். நாங்கள் இந்திய வம்சாவளி தமிழர்கள் என்று அழைக்கப்படுகிறோம். அவர்கள் இலங்கைத் தமிழர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள்... அவர்கள் பேசும் விதம், ஸ்லாங் வேறு, ஆனால் மொழி ஒன்றுதான்.

எனவே சிலர் ஒரு பகுதியை பிரித்து ஒரு தனி நாட்டை உருவாக்க விரும்பினர். மத்திய பிராந்தியத்தில் நாங்கள் தனி நாடு விரும்பவில்லை. நாங்கள் அனைவருடனும் இணக்கமாக வாழ விரும்பினோம்.

இந்தியாவில் உள்ள ஒரு சில அரசியல்வாதிகள் தனது நாட்டில் உள்ள பிரச்சினையைப் புரிந்து கொள்ளவில்லை.

போர் மற்றும் என்ன நடந்தது என்பது பற்றி நான் எதுவும் கூறாததாலும், நான் அரசாங்கத்திற்கு ஆதரவாக பார்க்கப்பட்டதாலும்... 5-10 சதவீத அரசியல்வாதிகள் நான் இனத்திற்கு துரோகி என்று நினைக்கிறார்கள்'. இவ்வாறு முத்தையா முரளிதரன் பேசினார். (05)

# இரு மதுபான உற்பத்தி நிலையங்களின் உற்பத்திகளுக்குத் தற்காலிகத் தடை

வரிசெலுத்தத் தவறியமையால் இரு மதுபான உற்பத்தி நிலையங்களின் உற்பத்திகளுக் குத் தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது.

இரு பிரதான மதுபான உற்பத்தி நிலையங்களின் மது உற்பத்திகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாககலால் திணைக்களம்செவ்வாய்க்கிழமை தெரிவித்துள்ளது. (05)

# மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்தார்





மஹிந்த ராஜபக்சவை மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி மஃமூன் அப்துல் கையூம் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பு திங்கட்கிழமை இடம்பெற்றது.

தனது தனிப்பட்ட விஜயம் காரணமாக இலங்கைக்கு வந்துள்ள நிலையிலேயே மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி மஃமூன் அப்துல் கையூம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## இராணுவ ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நினைவேந்தல்கள் செய்வதற்கு பொலிஸாரால் அனுமதி மறுக்கப்பட்டது. ஆகவே இவையெல்லாவற்றையும் கருத்தில்கொண்டு, இந்த அரசாங்கம் துயிலுமில்லங்கள் அமைந்திருந்த அரச காணிகள் அனைத்தையும் நினைவேந்தல் செய்வதற்குரிய காணிகளாக அங்கீகரித்து அதற்கென ஒதுக்கவேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன்.

அதேவேளை நினை வேந்தல்கள் மூலம் மக்கள் தமது மரியாதைகளை செலுத்துவதற்குரிய வகையில் இராணுவமுகாம்கள் அமைக்கப்பட்டுள்ள துயிலுமில்ல காணிகள்அனைத்தும்விடுவிக்கப்பட வேண்டும்.

நினைவேந்தல் உரிமையை அங்கீகரிப்பது நல்லிணக்கத்துக்கு மிக முக்கியமான விடயமாகும். இவ்விடயம் நிலைமாறுகால நீதி பொறிமுறையின் ஐந்தாவது தூணுமாகும். நினைவுகூருகின்ற துயிலுமில்லங்களை அழிப்பதோ, அல்லது நினைவேந்தல்களைத் தடைசெய்வதோ மனித குலத்துக்கு எதிரான போர்க்குற்றமாகும். ஆகவே - இது தொடர்வதற்கு அனுமதிக்கமுடியாது.

போர் முடிவடைந்துது 15 வருடங்கள் ஆகிவிட்டன. ஜே.வி.பி.க்கு அவர்களுடைய ஆயுதப் போராட்டம் முடிவடைந்து ஒருசில வருடங்களுக்குள்ளேயேஅவர்களை நினைவுகூரஅனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால், தங்களுக்காக உயிர்நீத்தவர்களை நினைவுகூர விடாமல் தமிழ் மக்களைத் தடுப்பது என்பது இனவாதத்தைத் தவிர வேறொன்றுமாக இருக்க முடியாது. ஜே.வி.பி. சிங்கள அமைப்பு என்பதற்காக அனுமதிக்கிறீர்கள். ஆனால்தமிழர்கள்என்றவகையில் எமது நினைவேந்தல்களை திட்டமிட்டுத் தடுக்கிறீஜுகள். இப்படிப்பட்ட பாரபட்சங்களை நீங்கள் நிறுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

போர் முடிவடைந்த பின்னர் மிகச்சிறந்த நிலைக்கு செல்ல வேண்டிய நாடு, இன்றைக்கு தலைகுப்புற விழுந்திருக்கிறதென்றால் அதற்குக் காரணம், உயிரிழந்த ஆத்மாக்களின் சாபங்களேயாகும். புத்த பெருமானகூட வெட்கித்தலைகுனியக்கூடிய அளவுக்குத்தான் உங்கள் செயற்பாடுகள்அமைந்திருக்கின்றன.

இனவழிப்பைசெய்தவர்களைக் காவலர்களாக சிங்கள மக்கள் கருதினார்கள். ஆனால் இன்று சிங்கள மக்களுக்கே துரோகம் அளித்தவர்கள்என்றஅடிப்படையில், அவர்கள் அந்த மக்களாலேயே துரத்தியடிக்கப்பட்டனர். இனியாவது விளங்கிக்கொண்டு, உங்களின் மிக மோசமான இனவாதப் பாதையை விட்டுதிருத்திக்கொள்ளுங்கள்என்று கேட்டுக் கொள்கின்றேன் என்றார்.

## தரமற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவிடமும் வாக்குமூலம் பெறப்படவுள்ளது. மேலும், அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்தவிடம் மீண்டும் வாக்குமூலம் பதிவு செய்யப்படவுள்ளது.

போலியான இம்யூனோகுளோபியுலின் தயாரித்த நிறுவனத்தின் பல அதிகாரிகளிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதோடு, குறித்த சம்பவம் தொடர்பில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், பல விசேட வைத்தியர்களுடனான கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரின் பங்கேற்புடன் இந்த கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டதோடு, அவை குறித்து மேலதிககவனம்செலுத்தப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வருடம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கமேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை ஹோட்டல் சங்கம் இன்று தனது 58 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது. வியட்நாம் போன்ற நாடுகளில் உள்ள ஹோட்டல் சங்கங்களைப் பொறுத்தவரை, நிறுவப்பட்ட காலம் 20 முதல் 30 ஆண்டுகளாக இருக்கலாம். ஆனால், நம்மை விட அவர்களுக்கு எப்படி அதிக சுற்றுலாப் பயணிகள் செல்கிறார்கள் என்பதுதான் இங்கு எழும் கேள்வி.

அதற்கிணங்க,இந்தநேரத்தில் சுற்றுலாத்துறையைஎவ்வாறு மேம்படுத்துவதுஎன்பதுதான் இப்போது சிந்திக்கப்பட வேண்டும். முதலில் இந்த நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைஅதிகரிக்க வேண்டும்.

இந்த ஆண்டு சுமார் 1.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர். 2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இந்நிலைமை சிறப்பாக உள்ளது என்று கூறலாம். ஆனால் அடுத்த ஆண்டு அது 2.5 மில்லியனாக இருக்க வேண்டும். அத்துடன், வருடாந்தம் இந்நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைமேலும்அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இரண்டாவதாக, ஒரு சுற்றுலாப் பயணியிடம் இருந்து எவ்வளவு பணம் சம்பாதிக்கிறோம் என்றும் அந்தத் தொகையை எப்படி அதிகரிப்பது என்பதிலும் கவனம் செலுத்த வேண்டும். மேலும், குறைந்த பட்சக் கட்டணக் காலத்திலிருந்து நீங்கி, நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டும். அதற்கான முறையான திட்டத்தை உருவாக்க வேண்டும்.

சுற்றுலாத் துறையில் நாம் மிக உயர்ந்த தரத்தில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். மேலும், நமது சுற்றுலாத்துறை சிறப்பு வாய்ந்ததாக இருக்க வேண்டும். அவை இன்றி சுற்றுலாத்துறையில் வளர்ச்சி அடைய முடியாது. நம்மிடம் பல திறமைகள் உள்ளன. ஆனால் அந்த திறன்களை நாம் வளர்த்துக் கொள்ளவில்லை.

நமது உணவுக் கலாசாரத்தைப் பார்த்தால், அது ஒரு பகுதியில் இருந்து மற்றொரு பகுதிக்கு வேறுபடுகின்றது. நீங்கள்அதைப் பயன்படுத்தியிருக்கிறீர்களா?எனவே எமது உணவுக்கலாசாரத்தில் உள்ள வேறுபாட்டை சுற்றுலாத்துறைக்குக் கொண்டு செல்வோம்.

சுற்றுலாத் துறை நமக்கு புதிய விடயமல்ல. அது அநுராதபுர யுகத்திலிருந்தே ஆரம்பமானது என்பதைக் கூற வேண்டும். ஒரு பருவ காலத்தில் இலங்கைக்கு கப்பலில் வருகை தந்த சுற்றுலாப் பயணி அடுத்த பருவ காலம் வரும் வரை இலங்கையில் தங்கியிருக்க வேண்டியிருந்தது. அப்போது அநுராதபுரத்தில் 'சிவப்பு விளக்கு வலயங்கள்' கூட இருந்ததாக கூறப்படுகிறது.

நான் அதை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் கூட, அந்தக் காலங்களில் அவர்கள் தங்களின் வழிமுறைகளில் சுற்றுலாத்துறை பற்றி சிந்தித்திருப்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். விருந்தோம்பலை சுற்றுலாத் துறையின் சிறந்த திறவுகோலாகக் குறிப்பிடலாம். சுற்றுலாப் பயணிகளுக்கு கிடைக்கும் தங்குமிடம், அவர்களுக்குக்கிடைக்கும்ஏனைய வசதிகள் மற்றும் உணவு பற்றியும் குறிப்பிட வேண்டும்.

மேலும், நமது சமையல் திறனை விரிவுபடுத்த வேண்டும். இலங்கைஉணவுமட்டுமல்லவெளிநாட்டு உணவுகளையும் அங்கு அறிமுகப்படுத்தலாம். முதலாவது, ஸ்பெயினில் உள்ள பெயெல்லா முதல் ஜப்பானின் அரிசி வரை முழுமையானஅரிசிவகைகளையும் எமது சமையல் வகைகளில் அறிமுகப்படுத்தலாம். மற்றும் நாம் எமக்கே உரிய கலவையையும் ஏற்படுத்த முடியும்.

2003, -2004 காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட புட்டிக் ஹோட்டல் தற்காலத்தில் சிறப்பாகச் செயல்படுகிறது. மேலும், நாம் பிரவேசிக்கக்கூடிய பல சந்தை வாய்ப்புகளும் உள்ளன. கொல்ப் சுற்றுலாத் துறையைமேம்படுத்தும்அதேநேரம், நாட்டின்சுற்றுலாவாய்ப்புகள்குறித்து கவனம்செலுத்த வேண்டியுள்ளது.

அத்துடன், கொழும்புக்கு வரும் சுற்றுலா பயணிகளை தக்கவைத்துக்கொள்வது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும். தற்போது கொழும்புக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் கங்காராம விகாரை, அருங்காட்சியகம், சுதந்திர சதுக்கம் உள்ளிட்ட சிலபகுதிகளைமாத்திரமேபார்வையிடக்கூடியதாக உள்ளது. அவர்களை கொழும்பில் தக்க வைப்பதற்காக பொழுதுபோக்கு, இசை மற்றும் உணவு அம்சங்களை கொண்ட புதிய திட்டங்களை உருவாக்க வேண்டும்.

எதிர்காலத்தில் கொழும்பு ஜனாதிபதி மாளிகையை சூழவுள்ள பகுதியில் இருந்து சுதந்திர சதுக்கம் வரையிலான பகுதி புதிய முறையில் மாற்றியமைக்கப்படும். தற்போதும் சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்காக கண்டி போகம்பரை சிறைச்சாலை வளாகத்தை பயன்படுத்துவது தொடர்பான முன்மொழிவொன்று கிடைத்துள்ளது. அத்துடன்கொழும்பு, கண்டி உட்பட நாட்டில் சுற்றுலாப் பயணிகளைகவரக்கூடிய இதுவரை கவனம்செலுத்தப்படாதபலஇடங்கள் உள்ளன. அவ்வாறான இடங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

அதற்காக புதிய முறையில் சிந்திக்கவேண்டும். பழைமையான சிந்தனைகள்ஊடாகஅந்தஇலக்கை அடைய முடியாது. சுற்றுலாப் பயணிகளை நாட்டிற்கு ஈர்ப்பது பற்றிய புதிய சிந்தனைகள் அவசியப்படுகின்றன.

அதனூடாகவே நாம் ஐந்து மில்லியன் இலக்கை வெல்ல முடியும். குறைந்தது 500 - 600 டொலர்கள் வரையில் செலவு செய்யக்கூடிய ஐந்து மில்லியன் சுற்றுலாப்பயணிகளை இலக்காகக் கொள்ள வேண்டும். அதனை எம்மால் செய்ய முடியும். அதற்கான கட்டுப்பாடுகளும் இருக்கக்கூடாது.

ஒரு வரையறைக்குள் இருந்து சிந்திக்ககூடாது. உங்களால்அதனை செய்ய முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. 5 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் என்ற இலக்கை அடைந்த பின்னர், அதிக வருமானம் ஈட்டும் 7.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளின் இலக்கை நோக்கிச் செல்ல முடியும். அதன் போது, 750 - 1000 டொலர்கள் வரையில்செலவிடக்கூடியசுற்றுலாப் பயணிகள் தொடர்பில் கவனம் செலுத்த முடியும் என்றார்.

## பரீட்சைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும்செய்தியாளர்மாநாட்டில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர்மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான்கல்விஅமைச்சராகஇருந்த காலத்தில் தரம் 5 புலமைப்பரிசில், க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சை முதலான 03 பிரதான பரீட்சைகளின் பெறுபேறுகள் மிக விரைவாக வெளியிடப்பட்டன. கொரோனா தொற்று பரவலைத் தொடர்ந்து, முழுக் கல்வி வலையமைப்பும்வீழ்ச்சியடைந்தது.

அதன் பின்னர், பரீட்சைகளை நடத்துவது குறித்து பல்வேறு தரப்பினர் பல்வேறு கருத்துகளை கூறி பல்வேறு பிரச்சாரங்கள், போராட்டங்கள், நீதிமன்ற உத்தரவுகள் போன்றவற்றை பெறுதல் என பல்வேறு காரணங்களால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

பரீட்சை பெறுபேறுகளை விரைவில் வெளியிடுவதற்கான முறைமையொன்றைதயாரிப்பதற்கு தானும் பரீட்சை திணைக்களமும் கடுமையாக உழைத்து வருவதாக கல்வி அமைச்சர் தொடர்ந்தும் பாராளுமன்றத்தில் அறிவித்து வருகிறார்.

ஆனால் அவர்களின் கட்டுப்பாட்டிற்குஅப்பாற்பட்டகாரணிகளால் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும், ஜனாதிபதிஉட்பட25நிபுணர்களைக் கொண்ட அமைச்சரவை உபகுழுவின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை கருத்திற்கொண்டு கல்விக்கான புதிய தேசிய கொள்கையொன்று அமுல்படுத்தப்படுத்தப்படுகிறது என்றார்.

## காலநிலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சூழல் மற்றும் அபிவிருத்தியை எவ்வாறு சமநிலைப்படுத்துவது என்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டும். வரையறுக்கப்பட்ட நமது சுற்றுச்சூழல் கட்டமைப்பில் பெருமளவிலான வளங்கள் காணப்படுகின்றன.

இரத்தினக் கற்கள் மற்றும் கனிய வளங்களைப் பொருளாதார ரீதியாக பயன்படுத்தப்படும் போது ஏற்படும் சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பிரச்சினைகளை எவ்வாறு கையாள்வது என்பது குறித்தும் முறையான ஆய்வு செய்யப்பட வேண்டும்.

அது தொடர்பான நமது சுற்றுச்சூழல் வேலைத்திட்டங்கள் முறையான மற்றும் திட்டமிட்ட அறிவியல் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறின்றி நடைபெறும் ஒரு சிறிய குறைபாடு எல்லாவற்றையும் அழிக்க முடியும்.

இது இருபத்தி இரண்டு மில்லியன் மக்களை மட்டுமல்ல, பிறக்கவிருக்கும் குழந்தைகளையும் பாதிக்கிறது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

இயற்கை சூழல் கட்டமைப்பைப் பாதுகாத்தல் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பில் தற்போது உலகளவில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. முன்னெப்போதும் இல்லாத வகையில் பல உலகத் தலைவர்கள் இதில் ஆர்வமாக உள்ளனர்.

டுபாய் எக்ஸ்போ சிட்டியில் 2023 டிசம்பர் 04 ஆம் திகதி, நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டை மற்றொரு சிறப்பு நிகழ்வாக குறிப்பிடலாம். இதில் சுமார் 136 உலகத் தலைவர்கள் பங்கேற்க உள்ளனர்.

பூமியில் ஏற்படும் காலநிலை மாற்றங்கள் குறித்து முழு உலகமும் கவனம் செலுத்தியிருப்பதை இது உறுதிப்படுத்துகிறது. இதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான குழுவினரும் கலந்து கொள்கின்றனர்.

இதுவரை நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்ற மாநாட்டில் எட்டப்பட்ட இணக்கப்பாடுகள் மற்றும் உடன்படிக்கைகளை விரைவாக நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டத்தை தயாரிப்பதே ஜனாதிபதியின் பிரதான இலக்காகும்.

காலநிலை மாற்றம் தொடர்பான பல முக்கியமான முன்மொழிவுகள் குறித்து உலகத் தலைவர்களின் கவனத்தை ஈர்க்கவும் ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் தரமற்ற மருந்துகள் குறித்து பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுந்தன. அதன்போது கிடைத்த முதலாவது முறைப்பாடின்போதே செயற்பட்டு குறித்த மருந்துக்கு அனுமதி பெறப்பட்ட விதம், தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையத்தின் ஊடாக ஆராயப்பட்டது.

போலி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை தெரியவந்தது. இது தெரியவந்தவுடன் நான் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்தேன். அது தொடர்பில் தற்போது நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நான் செய்த முதலாவது முறைப்பாட்டைத் தொடர்ந்து பல்வேறு குழுக்கள் முறைப்பாடளிக்க ஆரம்பித்தன. எனவே, பல்வேறு தரப்பினரினதும் குற்றச்சாட்டுகளை நான் மறுக்கிறேன். யார் குற்றவாளி என்பதை நீதிமன்றம் தீர்மானிக்கும் என்றார்.

## ரூபவாஹினி,....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் 2023 ஆம் ஆண்டு 277 மில்லியன் ரூபா நட்டத்தையும், இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் 2023 ஆம் ஆண்டில் 457 மில்லியன் ரூபா நட்டத்தையும் அடைந்திருக்கின்றன என்றார்.




JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
13A, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர் Kalaikkathir

# வனவள திணைக்களத்தால் மக்களின் காணிகள் கையகப்படுத்தப்பட்டால் அவை விடுவிக்கப்படும்

## பவித்ரா உத்தரவாதம்



மக்களின் காணிகள் வனவளத்துறை திணைக்களத்தின் கட்டமைப்புக்குள் உள்வாங்கப்பட்டிருந்தால் அந்த காணிகள் நிச்சயம் விடுவிக்கப்படும். 1985 ஆம் ஆண்டு காணி வரைபடத்தை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன.

மக்களின் காணிகள் உறுதிப்பத்திரத்துடன் கையளிக்கப்படும் என வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராட்சி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் சுற்றாடற்றுறை மற்றும் வனஜீவராசிகள், வனப்பாதுகாப்பு அமைச்சுக்கான செலவுத் தலைப்பு மீதான விவாதத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட 11 மாவட்டங்களில் 1985 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் காணி பராமரிப்பு செய்யப்பட்ட விதம் குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. மக்களின் காணிகள் திணைக்களத்தின் கட்டமைப்புக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டால் அந்தக் காணிகள் விடுவிக்கப்படும்.

ஜனாதிபதியின் ஆலோசனைகளுக்கு அமைய அதற்காக இரண்டு அமைச்சரவை யோசனைகளை முன்வைக்க உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளேன்.

அமைச்சின் செயலாளர் மற்றும் பணிப்பாளர் ஆகியோர் மாவட்டங்களுக்கு நேரடியாகச் சென்று 1985 ஆம் ஆண்டுக்கு முன்னர் குடியிருந்த காணிகளை முழுமையாக அடையாளப்படுத்தியுள்ளனர்.

அதற்கான அறிக்கை தற்போது முழுமைப்படுத்தப்பட்டுள்ளது. மாவட்ட செயலாளருடன் தொடர்பு கொண்டு உங்களுக்கு (அங்கஜன் இராமநாதனை நோக்கி) அந்த அறிக்கையை பெற்றுக்கொள்ள முடியும்.

அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களைக் காட்டிலும் மேலதிகமாக யோசனைகள் ஏதும் காணப்பட்டால் அவற்றை முன்வையுங்கள். மீள்பரிசீலனை செய்யலாம். ஜனாதிபதியின் செயலாளர் தலைமையிலான தேசிய குழுவில் சமர்ப்பித்து, காணிகள் ஆணையாளருக்கு அதிகாரங்களை பொறுப்பாக்கி, பிரதேச சபை ஊடாக உறுதிப்பத்திரத்துடன் காணிகள் கையளிக்கப்படும். - என்றார். (05)

## யாழ்ப்பாணத்தில் மலையகத்தை உணர்வோம்




யாழில் மலையகத்தை உணர்வோம் எனும் கருப்பொருளிலான நிகழ்வு யாழ்ப்பாணம் தந்தை செல்வா அரங்கத்தில் இடம்பெறவுள்ளது.

நவம்பர் 30, டிசெம்பர் 1,2,3 ஆகிய தினங்களில் காலை 9.00 மணி முதல் 6.00 மணிவரை இடம்பெறும் இந்த நிகழ்வானது மலையக மக்களின் வாழ்வு, சவால்கள், அடைவுகள் மற்றும் நிலைமை என்பவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்திருக்கும். நடமாடும் அருங்காட்சியகம், கண்காட்சி, கலை நிகழ்வுகள், ஆவணத் திரையிடல், அரசியல் - புலமை பகிர்வு மற்றும் ஆற்றுகை நிகழ்வுகள் ஆகியவற்றின் மூலம் மலையகத்தின் 200 வருடகால வரலாற்றுப் பயணத்தை உணர்ந்து கொள்ளவும், மலையக மக்கள் எதிர்பார்க்கும் அடைவுகளை பெற உணர்வு ரீதியாக ஆதரவளிக்கும் வகையிலும் நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது என்று அதனை ஒழுங்கமைத்துவள்ள கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனம் மற்றும் யாழ்ப்பாண சிவில் சமூக அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

# பேர்ள் கப்பல் விபத்து தொடர்பான வழக்கு சிங்கப்பூரில் தொடர்கிறது

## நீதி அமைச்சர் விஜேதாஸ தகவல்



எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தால் எமது கடல் வள சுற்றாடலுக்கும் ஏற்பட்ட பாதுப்புக்கு நஷ்டஈடாக 6,4 பில்லியன் அமெரிக்க டொலர் அறவிட்டுக்கொள்வதற்காக சிங்கப்பூர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு விசாரணை தற்போது இடம்பெற்று வருகிறது என நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு செலவு திட்டத்தில் சுற்றாடல் அமைச்சு, வனஜீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சுகளுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலம் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சி உறுப்பினர் இரான் விக்ரமரத்ன, எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தால் ஏற்பட்ட பாதிப்புக்கான நட்டஈடு கோரி தொடுக்கப்பட்ட வழக்கு விசாரணைகளின் முன்னேற்றநிலை தொடர்பாகக் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

நியூடயமண்ட் மற்றும் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்துக்களால் எமது கடல் வள கட்டமைப்புக்கு பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக எமது நாட்டு அதிகாரிகள் செயற்பட்ட விதம் தொடர்பான சந்தேகத்துக்கிடமான விடயங்கள் தொடர்பில் நானே இந்த சபைக்கு முன்வைத்தேன். அதன் பிரகாரம் இது தொடர்பாக ஆராய்ந்து பார்க்க நாடாளுமன்ற தெரிவுக்குழுவொன்றை நியமிக்குமாறு சபாநாயகரிடம் பிரேரணை ஒன்றை முன்வைத்தேன்.

அதன் பிரகாரம் அமைச்சர் ரமேஷ்பத்திரண தலைமையில் தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. இந்தக் கப்பல் விபத்தால் சுற்றாலுக்கு ஏற்பட்ட பாதிப்பு தொடர்பாக நான் அறிந்த விடயங்களை அந்தத் தெரிவுக் குழுவுக்குத் தெரிவிக்க எனக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நான் அறிந்த விடயங்களை அந்தக் குழுவுக்கு தெரிவித்திருந்தேன். இது தொடர்பாக ஆழமாக ஆராய்ந்து இதன் உண்மைத் தன்மையை மக்களுக்கு அறிவுறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து தொடர்பான இரண்டு வழக்குகள் தொடர்பில் சட்டாமா அதிபர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு குறித்த வழக்கு நடவடிக்கைகளை முன்னுக்குக் கொண்டு செல்வதற்காக அமைச்சரவையால் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

அதன் பிரகாரம் சிங்கப்பூர் நீதிமன்றத்தில் 6,4 பில்லியன் அமெரிக்க டொலர் அறவிட்டுக்கொள்வதற்காக தொடுக்கப்பட்ட வழக்கு விசாரணை தற்போது இடம்பெற்று வருகிறது. அதற்கு மேலதிகமாக அதற்கு வரையறைகளை ஏற்படுத்த பெரிய பிரித்தானியாவின் உயர் நீதிமன்றம் தொடுத்திருக்கும் வழக்கு நடவடிக்கைகளுக்கு தலையிடுவதற்கு வெளிநாட்டு சட்டத்தரணிகள் சங்கங்கள் 3 இற்கு சாட்டப்பட்டிருக்கின்றன. அது தொடர்பான தற்போதைய நிலைமை தொடர்பில் தேவை என்றால் அடுத்த வாரத்தில் தெரிவிக்க முடியும். - என்றார். (05)

# வவுனியாவில் பதாதைகளை அகற்ற முற்பட்டவர் கைதாகிப் பிணையில்

## ஊடகவியலாளர் மீதும் வழக்கு

வவுனியாவில் விடுதலை புலிகளுக்கு சேறு பூசும் விதமாக காட்சிப்படுத்தப்பட்ட பதாதைகளை அகற்ற முற்பட்ட முன்னாள் போராளி பிணையில் விடுவிக்கப்பட்டதுடன், குறித்த சம்பவத்தை செய்தி சேகரித்துக்கொண்டிருந்த சுதந்திர ஊடகவியலாளர் கார்த்தீபன் மீதும் பொலிஸார் வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர்.

வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்திற்கு மிக அருகில் தபால் நிலையத்திற்கு முன்பாக அரசுடன் இணைந்து செயற்பட்ட சிலரது பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மெய்யான தலைவர்கள் என்ற தலைப்பில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள குறித்த பதாதைகளில் விடுதலைப்புலிகளால் இவர்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர் என வாசகங்களும் பொறிக்கப்பட்டிருந்தன.

குறித்த பதாதைகள் மக்கள் மத்தியில் குழப்பநிலையை ஏற்படுத்தும் என்ற காரணத்தால் முன்னாள் போராளியும் போராளிகள் நலன்புரிச்சங்கத்தின் தலைவருமான செ.அரவிந்தன் அந்தப் பகுதிக்குச் சென்று இவற்றை அகற்றுமாறு தெரிவித்தார்.

இதன்போது சம்பவ இடத்திற்கு வருகைதந்த வவுனியா பொலிஸார் அவரை, வலுக்கட்டாயமாகக் கைதுசெய்தனர். அவர் மீது ஆத்திரத்தை தூண்டி குழப்பத்தை ஏற்படுத்த முயன்றார் என்ற குற்றச்சாட்டில் நீதிமன்றில் வழக்கும் தாக்கல்செய்திருந்தனர்.

கைதுசெய்யப்பட்டவர் நேற்;று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதுடன், அவருக்கு பிணை வழங்கி நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை குறித்த சம்பவத்தைச் செய்தி சேகரித்துக்கொண்டிருந்த வவுனியா ஊடக அமையத்தின் தலைவரான ஊடகவியலாளர் மீதும் பொலிஸார் பக்கச்சார்பான முறையில் அதே வழக்கை தாக்கல் செய்துள்ளனர். இதனால் அவரை கைதுசெய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கில் முன்னாள் போராளி சார்பாக சிரேஸ்ட சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் தலைமையில் பத்திற்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் ஆயராகியிருந்தனர். (05)

# இரட்டை பெண் குழந்தைகளை பிரசவித்த தாய் திடீரெனச் சாவு

வடமராட்சி தொண்டைமானாறு வல்வை வீதியைச் சேர்ந்த இளம் தாய் இரட்டை பெண் குழந்தைகளை பிரசவித்த சில நாட்களில் உயிரிழந்த சம்பவம் பெரும் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது. இச்சம்பவம் திங்கட்கிழமை யாழ் போதனா வைத்திய சாலையில் இடம் பெற்றுள்ளது.

கடந்த வருடம் திருமணம் செய்த குறித்த பெண் பிரசவத்திற்காக யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். கடந்த சில தினங்களுக்கு முன் குறித்த பெண்ணுக்கு இரட்டை பெண் குழந்தைகள் பிறந்ததாகத் தெரிக்கப்படுகின்றது. நல்ல உடல் நலத்துடன் தாயும் இரு குழந்தைகளும் காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், தாய் தீடிரென உயிரிழந்தமை அதிர்ச்சியையும் துயரத்தையும் ஏற்படுத்தியுள்ளது. சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் இடம் பெற்று வருகின்றது.

சம்பவத்தில் தொண்டைமானாறு வல்வை வீதியைச் சேர்ந்த 25 வயதுடைய நி.விதுஷா என்ற இளம் தாயே உயிரிழந்துள்ளார். (05)

# நாவலப்பிட்டியில் மண்சரிவு: போக்குவரத்தும் பாதிப்பு

கடும் மழை காரணமாக நாவலப்பிட்டி - புடலுஓயா பிரதேசத்தில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதால் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

இதனால் வாகன சாரதிகள் மாற்று பாதைகளை பயன்படுத்துமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர் .

இதன்படி வீதியில் விழுந்த மண் மற்றும் கற்களை அகற்றும் பணியில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது . (05)

# போக்குவரத்துச் சபை டிப்போவில் டீசல் திருடிய ஊழியர் கைதானார்

*குளியாப்பிட்டியிலுள்ள இலங்கை போக்குவரத்து சபையின் டிப்போவில் 3 லீற்றர் டீசலை திருடிய ஊழியர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.*

*குளியாபிட்டிய லங்காம டிப்போவின் அதிகாரியொருவர் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த ஊழியர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் குளியாபிட்டிய நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)*




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.11.2023இல் வெளியிடப்பெற்றது.